



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -369

## ஒன்றிணைந்த தமிழ் தரப்பின் அரசியல் நகர்வுகளே வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும்



## இலங்கை தீவில் தொடரும் அரச பயங்கரவாதம்




## வடகிழக்குஇணைப்பு, 13வது திருத்தச்சட்டம், மாகாணசபை தேர்தல் நடப்பது என்ன? – அரியநேந்திரன்



## வீழ்ச்சியபடையும் இலங்கை பொருளாதாரம்

# ஒன்றிணைந்த தமிழ் தரப்பின்அரசியல் நகர்வுகளே வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்கும்



2022 ஆம் ஆண்டு இன்றைய அரசியல் நடைமுறைகளை பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்கான தீர்வு 2022 ஆம் ஆண்டு எட்டப்படுமா? என்றவொரு சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. இன்று 13 ஆம் திருத்த சட்டம் என்று பேசுகின்றார்கள். அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும் அதற்கான முன்நகர்வுகள் சர்வதேச ரீதியாக நாடுகளை அணுகி அதனூடாக வெற்றிகளை பெறவேண்டும் என்ற முனைப்புடன் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற அங்கத்துவ கட்சிகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பொழுது ஒரு தீர்வு திட்டம் என்ற அடிப்படையிலே சமஷ்டியைப் பற்றி பேசுகின்றார்கள் ஒற்றையாட்சிக்கு கீழ் தீர்வு என்று பேசுகின்றார்கள். முஸ்லிம் ஒரு தரப்பினர் சமஷ்டியை ஏற்றுக்கொள்கின்றது. மற்றைய தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் ஒரு ஆயுத பலம் வாய்ந்தவர்களாக இருந்து தமிழ்தேசிய கூட்டமைப்பை ஒரு கட்சியாக வழிநடத்தினார்கள். அந்த அடிப்படையில் அக் கட்சியினுடைய செயற்பாடுகள் செயற்பட்டுக்கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டளைகளுடன் கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டுக்கொண்டிருந்தது.

இன்றைய காலகட்டத்தில் அதனை நடைமுறைப்படுத்துவது என்பதில் பாரிய சிக்கல் இருக்கின்றது. ஏனென்றல் வலுவான ஒரு ஆயுதப்பலம் இல்லை என்பது அந்த ரீதியிலே செயற்படுகின்ற பொழுது இருந்த நிலைப்பாடு தற்பொழுது காலத்தின் தேவை கருதி மாற்றம் பெற்றிருக்கின்றது. எனவே ஒவ்வொரு செயற்பாடுகளும் இன்று அதாள பாதாளத்திற்குள் சென்றுகொண்டிருக்கின்றது. இதனை சரி செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் அரசியலுடைய அடுத்த கட்ட நகர்வுகளை ஒரு சர்வதேச நாட்டின் உதவியுடன் தான் நகர்த்தி செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த நாட்டில் தலையிட்டிருக்கின்ற இந்தியா.அமெரிக்கா.சீனா போன்ற நாடுகள் தமது சுயலாப அரசியலுக்காக தமிழ் மக்களுடைய பிரச்சனை உள்நாட்டு யுத்தத்தை பயன்படுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது தான் கடந்த 30 ஆண்டு காலங்களாக இடம்பெற்ற வரலாறு. நோர்வேயினுடைய தலையீட்டினூடாக தமிழ் மக்களுக்கான தீர்வை எட்டிப்பிடிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்த பொழுது அந்த பேச்சு வார்த்தையும் குழப்பியெறியப்பட்டது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்த 2005 க்கு பின்னரான காலப்பகுதிகளிலே சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த அரசாங்கத்தை நடத்த முடியாது மிக இக்கட்டான சூழலிலே இந்த அரசாங்கத்தை தான் நடத்த முடியாது என்ற தீர்க்கமான ஒரு முடிவை எடுத்து மகிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அது போன்று அதன் பின்னர் வந்த மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டை நன்றாக கொண்டு செல்வார் என்ற நம்பிக்கை நிலவியது ஆனால் அந்த நம்பிக்கையும் அற்றுப்போன நிலையிலே இன்று ஒரு பேச்சு வார்த்தையினூடாக அல்லது இந்தியாவை அணுகி இந்தியாவின் மூலம் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டை பெரும்பான்மையான தமிழ் தரப்புக்கள் எடுத்திருக்கின்றது. இதுவும் எந்த வகையில் சாத்தியமாகும் என்று கூறிவிட முடியாது. அது சாத்தியப்பட்டால் வரவேற்கத்தக்க விடயம்.

எனவே இந்தியாவினுடைய கால்பதிப்பு என்பது இலங்கையில் இல்லாது போகும் பொழுது தான் இந்தியா அக்கறை கொள்ளுகின்றது. அதே நேரம் இலங்கையில் இருக்கக்கூடிய மிக முக்கியம் வாய்ந்த பெரும்புள்ளிகள் சீனாவினுடைய கையில் சென்று விட்டது என்பது இந்தியாவிற்கு நன்கு தெரியும். இந்த அரசாங்கம் அல்ல அடுத்த அரசாங்கம் வந்தாலும் கூட இந்த கடனை கட்டி இந்த நாடு முன்னேறும் என்பதிலே பாரியதொரு சிக்கலை கொண்டிருக்கின்றது. ஆட்சி மாற்றத்தினூடாக நாட்டிற்கு ஒரு தீர்வு வரும் என்பதில் யாருமே அதனை நினைத்துக்கூட பார்க்கத்தேவையில்லை. காரணம் பூகோள அரசியல் என்பது அந்நிய நாடுகளின் சக்திகளுடன் கையாளுகின்ற நடைமுறைப்படுத்தப்படும் ஒரு விடயமாக தற்போதைய சூழல் மாறியிருக்கின்றது.

இன்று வடகிழக்கை எடுத்துக்கொண்டால் வடகிழக்கிலே ஒரு தமிழர் தாயகத்தை நிறுவ வேண்டும் என்று கடந்த 30 ஆண்டுகால போராட்டங்கள் இடம்பெற்றது. இதில் தமிழ் கட்சிகளுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்தி 22 ஆசனங்களை கொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பை சின்னாபின்னமாக உடைக்கின்ற ஒரு நடவடிக்கையைத் தான் அடுத்த கட்ட நகர்வாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இதனைத் தான் இந்த அரசாங்கம் செய்துவந்திருக்கின்றது. ஆகவே இதில் மாற்றுக்கருத்தில்லை. சில உடன்பாடுகளை செய்துகொள்ளும் பொழுது நாம் ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே சில சாதகம் பாதகமான தன்மைகள் இருக்கின்றதா என்பதனை பார்த்துதான் சில அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்த வேண்டும். 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் பின்னடைவு ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து அந்த வலுவான காரணங்களை கண்டறிந்து அதற்கான முடிவுகளை எட்ட வேண்டும் என்ற சூழலை உருவாக்கிக்கொள்ள வேண்டும் அப்பொழுது தான் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டும் சாத்தியமாகும் சூழல் உருவாக்கப்படும். 2022 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பெரும்பாலானோர் இவ்வாறான ஒரு ஆட்சிமாற்றம் தேவையில்லாவிட்டாலும் பரவாயில்லை எங்களுடைய தேவைகள் பூர்த்தி செய்துகொள்வதற்காக இந்த நிலைமை இருக்கட்டும் என்று கூட பலர் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் எங்களுடைய தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை எல்லாம் பறிபோகின்றது என்பதனை அறியாமல் இருக்கின்றார்கள். அடுத்து வருகின்ற தலைமுறையினருக்கு இந்த போராட்டத்தினுடைய தன்மை ஏன் போராடப்பட்டது 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள்கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் இந்த மண்ணுக்காக போராடிய போராளிகள் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேருக்கும் மேல் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளார்கள். இவை அனைத்தும் எதற்காக நடைபெற்றது என்றால் தமிழினத்திற்கான அடக்கு முறைகள் ஏற்படுகின்றபொழுதுதான் இவை அனைத்துமே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும் ஒரு அரசியல் தீர்வை நோக்கி நகர வேண்டுமாக இருந்தால் வடகிழக்கு இணைப்பு மிக அவசியமாக இருக்கின்றது. இதை முஸ்லிம் தரப்பு தாங்கள் தங்களை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் தங்களுக்கான தனி அலகு வேண்டும் என்றெல்லாம் அவர்கள் மறுபுறத்திலே சென்று கொண்டிருக்கின்றார்கள். எனவே இந்த நிலை மாற்றப்பட்டு வடகிழக்கு இணைந்தது தமிழர் தாயகம் என்னும் பொழுது முஸ்லிம்களும் தமிழர்கள் என்றவொரு கோட்பாட்டுக்குள் வருகின்றனர். காரணம் என்னவென்றால் அவர்கள் அம்மா என்று எழுதி உம்மா என்று அழைக்கின்றார்கள். அப்பா என்று எழுதி வாப்பா என்று அழைக்கின்றார்கள். அவர்களுடைய உச்சரிப்பில் மட்டும் தான் வித்தியாசங்கள் இருக்கின்றன. மற்றும் அவர்களுடைய மதத்தொழுகையில் மட்டும் வித்தியாசம் இருக்கின்றனவே தவிர மற்றும்படி அவர்கள் தமிழ் பேசும் மக்கள் தான்.

ஆகவே இந்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் 13 ஆம் திருத்த சட்டம் அல்லது மாகாண சபைத் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக கைச்சாத்திட்டு மோடி அவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுடைய கட்சிகளில் இருக்கின்ற அங்கத்தவர்கள் எங்களுக்கு தெரியாமல் இந்த விடயங்கள் நடந்திருக்கின்றன என்று கூறுகின்றார்கள். நழுவிப் போகின்ற போக்கை கையாளும் விடயமாகத் தான் இருக்கின்றது. இந்தியாவை நம்பி தமிழீழ விடுதலைப்புலிகள் கூட ஏமாந்து இறுதியிலே ரஜீவ் காந்தி அவர்களை கொலை செய்யும் அளவிற்கு நிலைமை மாறியது அதுபோன்று ரணசிங்க பிரேமதாஸ அவர்களும் இந்திய இராணுவத்துடன் போரிடுவதற்கு 5000 ற்கும் மேற்பட்ட **AK 47** மருத்துவ வசதிகள் ரவைகள் போன்றவற்றை வழங்கியிருந்தார். இவர்கள் தங்களுடைய சுயலாப அரசியலுக்காக தங்களை வளப்படுத்திக்கொண்டு அதற்காக செயற்பட்டார்களே தவிர வேறு எந்த சுயலாப அரசியலுக்காகவும் இல்லை என்பதனை கூறிக்கொள்கின்றோம். 2022 ஆம் ஆண்டு சுபீட்சமான ஒரு ஆண்டாக வரவேண்டும் என்பது அனைவரினதும் விருப்பமாக இருந்தாலும் இதுவரையிலும் கூட தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசியலமைப்பு பேச்சு வார்த்தையை கூட நடத்தவில்லை. வெறுமனே பாராளுமன்றத்தின் எதிர்ப்பு வாதங்கள் வாத பிரதிவாதங்கள் ஊடாகவே இந்த பாராளுமன்றம் சென்றுகொண்டிருக்கின்றது. தமிழ்தரப்புடன்எந்தபேச்சுக்களும்இடம்பெறாத சூழலிலே த.தே.கூட்டமைப்புடனோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடனோ எந்தவித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறாத நிலையிலே வெறுமனே பாராளுமன்ற நகர்வை மட்டும் நகர்த்திக்கொண்டிருப்பதில் எந்தவித பலனும் இல்லை. அது வெறும் அபிவிருத்தி சார்ந்த சில விடயங்களை முன்னோக்கி செல்கின்றது. ஆகவே இந்த விடயத்தில் டக்ளஸ் தேவானந்தாவோ அல்லது அங்கஜன் இராமநாதனோ பிள்ளையான் அவர்களோ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று இருந்தும் எந்த வித பயனும் இல்லாத நிலையில் தான் இன்றிருக்கின்றது தமிழ் மக்களின் விடுதலை அரசியலைப் பொறுத்தவரையிலே. விடுதலை அரசியல் இந்த சாட்டில் சம பலமாக இருந்து கொண்டிருக்குமாக இருந்தால் விடுதலை அரசியலை நோக்கியதான அடுத்தகட்ட நகர்வுகளும் முன்னேற்றகரமாக இருக்க முடியும் எனவே தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் மௌனிக்கப்பட்டு விட்டது அல்லது மீள் உருவாக்க தமிழீழ விடுதலைப்புலிகள் வரப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடும் அல்லது ஏனையவர்களின் நிலைப்பாடும் என்பது பகல் கனவு. காரணம் தற்பொழுது நவீன யுகத்தில் இன்று ரோலர் விமானங்களை விட்டுதாக்குதல்களை நடத்துவதற்கான திறனை சர்வதேச ரீதியாக கொண்டிருக்கின்றது.

எனவே இவ்வாறான விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கம் வரமுடியாது என்று கூறுபவர்கள் இதனையும்சற்றுசிந்திக்கவேண்டிருக்கின்றது. இந்த நாட்டில் இனவிடுதலைக்காக நீண்ட கால யுத்தம் இடம்பெற்றது என்பதில் எந்த வித மாற்றுக்கருத்தும் இல்லை. ஆகவே இன விடுதலைக்காக போராடிய போராளிகளை சர்வதேசமும் இணைந்து பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியது இலங்கை அரசாங்கம். தற்பொழுது நாட்டில் இருக்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச சிந்திக்க வேண்டும் மீண்டும் ஒரு இரத்த களறி இந்த நாட்டில் ஏற்பட்டால் நாட்டில் இரு தரப்பிலும் பாரியதொரு விளைவை கொண்டுவரும் எனவே சர்வதேச நாடுகள் ஏதோவொரு வகையில் இந்த நாட்டுக்குள் யுத்தத்தை கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை திரை மறைவில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இந்தியாவை பொறுத்தவரையிலும் அவர்களும் சுயலாப அரசியலுக்காக தமிழீழத்தை ஆண்டாண்டு காலமாக பயன்படுத்திவந்தார்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் பல ஆண்டுகள் பயன்படுத்தி வந்தார்கள். இறுதியில் தோல்விக்கட்டம்வருகின்றபொழுதுதற்பொழுது சீனாவை இந்த நாட்டுக்குள் இலங்கை அரசாங்கம் இணைத்துக்கொண்டிருக்கின்ற பொழுது திரும்பவும் அவர்களுக்கிடையிலான ஒரு முறுகல் நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்பொழுது தமிழ் தரப்பை அடிக்கடி சந்தித்து பேச்சுக்களை நடத்தி மாயத் தோற்றத்தை கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவினுடைய ரோ இங்கு பலர் இறங்கியிருக்கின்றார்கள். அதைப்போன்று சீனாவினுடைய புலனாய்வுக் கட்டமைப்பு. அமெரிக்காவினுடைய புலனாய்வு கட்டமைப்பு இருக்கின்றது. இந்த நாட்டில் பிரதானமாக தேசிய புலனாய்வு கட்டமைப்பை இலங்கை அரசு வலுப்படுத்தினால் மட்டும் தான் தமிழ் மக்களுக்கான தீர்வை கையாள முடியும். டயஸ்போரா என்பது உலக நாடுகள் என்ற ரீதியிலே வளர்ச்சி பெற்றிருக்கின்றது. ஆகவே டயஸ் போரா மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு உள்வாங்கிக் கொண்டுசெல்வதன் ஊடாக இந்த நாட்டுக்கான ஒரு சுமுகமான தீர்வை பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் உருவாகும். இந்த டயஸ்போராவை விட்டு தடை விதிப்பது அல்லது இந்தநாட்டில் பயங்கரவாத சட்டத்தை தொடர்ந்தும் அமுல்படுத்துவது என்பது தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தை பெற்றுத்தர முடியாது என்ற ஒரு போக்கையே இது கொண்டிருக்கின்றது. ஆகவே இனி வருகின்ற காலங்களில் தமிழ் தரப்புக்கள் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் செயற்படுவதன் ஊடாக வடகிழக்கிணைந்த ஒரு தமிழர் தாயகத்தை உருவாக்க முடியும். 2022 ஆம் ஆண்டு அனைத்து அரசியல் தலைமைகளும் ஒரு குடையின் கீழ் நின்று முடிவுகளை எடுக்க வேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## ஜனாதிபதியின் உரையும். தமிழ் மக்களும்

9ஆவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை. ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டேயில் அமைந்துள்ள பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் கடந்த (18) முற்பகல் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஸ. எதிர்காலத்தில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழுங்கப்படும் போது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு முன்னுரிமை. எக்காரணம் கொண்டும் நிலக்கரி மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்க அனுமதி கிடையாது. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களைத் தூண்டுவதை நிறுத்துங்கள். சவால்களுக்கு மத்தியிலும் அடிப்படைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலட்சியம் காட்டவில்லை. பொதுமக்களின் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமையளித்தோம்.

பாதாள உலகக் கோஷ்டி மற்றும் போதைப்பொருள் பிரச்சினைகளை முற்றாக இல்லாதொழிப்போம். எந்தவொரு மனித உரிமை மீறல்களையும் அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கிறேன். அரசியல் நோக்கங்களை ஒதுக்கி வைத்துவிட்டு. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த. வடக்கு. கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்த வேண்டாம். உயர்தர அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க பாராளுமன்றத்தில் விவாதங்களை நடத்துங்கள். வரலாற்றில் எதிர்கொண்ட அனைத்துச் சவால்களும் சரியான தலைமைத்துவத்தின் கீழ் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு. கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம் என்கிற விடயங்களை பிரதானமாக உள்ளடக்கி மிக நீண்ட உரையொன்றினை ஆற்றிச்சென்றிருக்கிறார்.

ஜனாதிபதியின் இவ்வுரை தொடர்பில் பல அரசியல்வாதிகளும் தமது கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். எது எவ்வாறெனினும் ஜனாதிபதியின் இவ்வுரை தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் எதுவித எதிர்பார்ப்பும் ஏற்படப்போவதில்லை என்பது உண்மை. வழமைபோலவே இலங்கையின் ஆட்சியாளர்களின் உரைகளைக் கேட்டு உண்மைகளைத் தெளிந்தவர்கள் நாம். இன்றைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் அனைத்தும் தென்னிலங்கையை மையப்படுத்தியதாகவே நாம் காண்கிறோம். அபிவிருத்திகளாக இருந்தாலும் சரி ஏனைய செயற்பாடுகளாக இருந்தாலும் சரி. இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கானத் தீர்வு குறித்து அவர்களுடன் பேச தற்போதைய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. வெறுமனே உரைகளில் எழுத்துக்களில் மாத்திரம் கூறப்படுகின்றதே தவிர செயற்பாட்டு ரீதியில் எதுவும் நடைபெறப்போவதில்லை.

இன்று நாட்டை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தாரை வார்த்துக்கொடுத்துவிட்டு எதிர்கால சந்ததி தொடர்பில் பேசப்படுகின்றது. இரகசியமான முறையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. கடந்த ஒரிரு வருடங்களில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை அதிகரித்திருக்கிறது. வெளிநாட்டுக் கடன் கடந்த காலங்களை விட அதிகரித்திருக்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் செலுத்தி முடிக்கவேண்டிய கடன்கள் ஒருபக்கம். நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைநோக்கி கொண்டுசெல்லவேண்டிய நிர்பந்தம் மறுபக்கம் என அரசு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. அதற்கிடையில் ஜனாதிபதியின் உரையில் அடக்கப்பட்டுள்ள விடயங்களை செய்துமுடிப்பதற்கு அவரது கட்சிக்குள்ளேயே ஒத்துழைப்பு இருக்கிறதா எனில் கேள்விக்குறிதான்.

இன்று ஆட்சியிலிருக்கும் கட்சிகளுக்குள்ளேயே குழப்பங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எந்தநேரத்திலும் மைத்திரி தலைமையிலான கட்சி வெளியேறக்கூடும் என்கிற நிலைப்பாடு இருக்கிறது. சிங்களப் பெரும்பான்மையால் மட்டுமே ஜனாதிபதியாக தான் கடமையேற்றேன் என்பதை கருத்திற்கொண்டே ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்திருப்பதைக் காணலாம். வடகிழக்கு வாழ் தமிழ் - முஸ்லீம் மக்கள் தொடர்பிலும். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் குறித்தும் அவர் கரிசணை கொள்ளவில்லை.

அவர்களுடன் பேசுவதற்கு அவர் தயார் நிலையில் இல்லை. வெறுமனே அவருடன் ஒட்டியிருக்கும் தமிழ் - முஸ்லீம் அரசியல்வாதிகளாலும் எதனையும் செய்ய முடியவில்லை. இந்த ஆட்சியிலும் தமிழ் - முஸ்லீம் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுவரும் எனக் கனவு காண்பதை விட்டுவிட்டு. எமது அரசியலை எதிர்காலத்திற்காக பலப்படுத்தும் வேலைத்திட்டங்களை ஒற்றுமையாகச் செய்யவேண்டும். இல்லையெனில் மீதமாகவுள்ள எமது பிரதேசங்கள் பறிபோகும் நிலையும். எமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகும் நிலையும் உருவாகும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

174

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



*தரத்தினடிப்படையில் மிக முக்கியமான பணிகளில் ஒன்றாக, சோவியத் கெரில்லாக்களையும் மறைமுகக்காரர்களையும் அழித்தல் முன்வைக்கப்பட்டது.*

*மேற்கு உக்ரேனிய நிலப்பரப்பிலிருந்த ஜேர்மனியர்கள் வெளியேற்றப்பட்டபின், பெற்றுக்கொள்ளப்பட்ட சமர் அனுபவம், ஆயுதங்களதும் வெடிபொருட்களதும் பெருந்தொகையான சேமிப்பு, துல்லியமான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு, பரவியிருந்த முகவர்களின் வரிவான வலையமைப்பு போன்றவையாவும் செஞ்சேனை, உட்துறையமைச்சு மக்கள் சபை - அரச பாதுகாப்பு மக்கள் சபை, சோவியத் அதிகாரம் ஆகியவற்றிற்கெதிராக வேகமாகச் சமர் மற்றும் நாசவேலைப் பயங்கரவாத நடவடிக்கைகளை உ.தே.அ கட்டவிழ்த்துவிட உதவி செய்தன. இதற்குப் போதுமான எடுத்துக்காட்டாக கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக மேற்கொண்ட 14,500 ஆயுதத் தாக்குதல்களில் 1944 ஆம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து 1945 ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியில் உ.தே.அ இன் படைப்பிரிவுகள் 6,600 ,ற்கு மேற்பட்ட நாசவேலைப் பயங்கரவாத நடவடிக்கைகளை (அதாவது 45%) மேற்கொண்டதனைக் குறிப்பிடலாம்.*

*இந்த முதலாவது கட்டத்தில் அவர்களது சகல செயற்பாடுகளும் மிகப் பிரமாண்டம், தீர்க்ககரம், திறந்த செயற்பாடு போன்ற பண்புகளால் வேறுபட்டிருந்தன. இவையே அவர்களுக்கெதிராக இராணுவப் பிரிவுகளும் உட்துறையமைச்சுப் படைகளும் ஒருங்கிசைந்த பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணைபுரிந்தன. இதன் விளைவால் தேசியவாதிகள் மிக மோசமான இழப்பைச் சந்தித்தனர். எடுத்துக் காட்டாக, லிவோவ் இராணுவ வட்டப் பிரதேசத்தில் ஆறு மாதகாலத்தில், அதாவது 1944 ஆம் ஆண்டு ஒக்டோபரிலிருந்து 1945 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை கிளர்ச்சிக்காரர்களுக்கெதிரான 150 இற்கும் மேற்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இதில் ஒட்டுமொத்தமாக 16,000 பேர் பங்குபற்றினர். இந்த நடவடிக்கைகளின் போது 1,200 போளாரிகள் கொல்லப்பட்டனர். 1,160 பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர். 374 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதன்போது அரச படையினர் 45 பேர் மாத்திரமே (1:26 என்ற விகிதத்தில்) கொல்லப்பட்டனர். இந்தக் கட்டத்தில் மக்கள் வாழ்விடங்களைச் சோதனையிடும் நடவடிக்கைகள் எளிதான முறைகளில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சிறந்த பெறுபேறுகளைத் தந்தன. அவை பின்வருமாறே நடத்தப்பட்டன. அதாவது படைகள் கிராமத்தை முற்றுகையிட்டு அங்குள்ள வயது வந்த ஆண்கள் யாவரையும் கைது செய்தன. கைது செய்யப்பட்டவர்கள் சிமேர்கஷ் படைப்பிரிவுகளால் வடிகட்டப்பட்டனர்.*

*1944 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் வரையான ஆட்களைக் கொண்டிருந்த உக்ரேனியக் கிளர்ச்சி அமைப்பு இராணுவத் தோல்வியினதும் அதனது ஒழுங்கமைப்பு சீர்கெட்டதனதும் விளைவால் ஒருங்கிசைந்த தாக்குதல் தந்திரோபாயத்தைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டது. 1946 - 1948 ஆம் ஆண்டுப் பகுதியில் உ.தே.அ இன் இராணுவப் பிரிவு அரைவாசிச் சுதந்திரத்தைக்கொண்ட சிறிய குழுக்களாகக் கெரில்லா நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்வதில் இறங்கியது. ஆரம்பக் கட்டத்தில் சோவியத் படைகள் 500 - 600 பேரைக் கொண்ட படைப்பிரிவுகளுடன் சமரிட வேண்டியிருந்ததென்றால், .றுதி ஆண்டுகளில் செயற்பட்ட படைப்பிரிவுகள் 30 - 50 பேரைத் தமது அணியில் கொண்டிருப்பதே அபூர்வமானதாக இருந்தது.*

*இக்காலகட்டத்திலேயே தனது இறுதி வாழ்நாள்வரை துல்லியமாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பையும் நிர்வாகத்தையும் ஒழுங்கத்தையும் கட்டிக்காத்து வந்த போதிலும் கிளர்ச்சி அமைப்பின் தலைமைத்துவம் சிதறத் தொடங்கியது. திட்ட ஒழுக்கின்படி கிளர்ச்சி இராணுவம் பின்வரும் கட்டமைப்புக்களைக் கொண்டதாக இருந்தது. இரண்டாயிரம் வரையான ஆட்களைக்கொண்ட பற்றாலியன்கள், 120-150பேரைக்கொண்ட கொம்பனிகள், பிளாட்டூன்கள், செக்சன்கள் போன்றனவே அவையாகும். கட்டளையிடுகின்ற இராணுவம் பின்வருவனவற்றைக் கொண்டதாக இருந்தது. படைக்கட்டளையகம், அரசியல்பிரிவு, இராணுவக்காவற்றுறை, வேவு, பாதுகாப்புச் சபை, படைதிரட்டல் அமைப்புக்கள், ஏனைய கட்டமைப்புக்கள் போன்றனவாகும். சமர்ப் படைப்பிரிவுகளின் கட்டளையாளர்களாக உ.தே.அ இன் உறுப்பினர்கள் மாத்திரமே இருந்தார்கள். அவதானமாகத்தெரிவுசெய்யப்படுகின்ற தொண்டர்கள், அத்துடன் படைதிரட்டலில் சேர்ந்தவர்கள் (இடையிடையே வலுக்கட்டாயமாக) ஆகியவர்களிலிருந்து ஆளணி நிரப்பல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*இவர்கள் மொத்தப் போராளிகளின் எண்ணிக்கையில் 60 வீதம் வரையானவர்களாக இருந்தார்கள். படைதிரட்டலின் போது முதலாவதாக முன்னர் இராணுவத்தில் கடமையாற்றியவர்களே தெரிவு செய்யப்பட்டனர். உக்ரேனியத் தேசியவாதிகளின் படைப்பிரிவுகள் உருமறைப்பில் தமது திறன்களைத் திறம்பட வெளிக்காட்டினார்கள். நன்றாகப் பழக்கப்பட்ட இடத்திலும் (குறிப்பாக அடர்த்தியான காடுகளில்) போதுமானளவு ஆளணிகள் சார்பாக இருக்கின்றபோதும் மாத்திரமே அவர்கள் சமர் புரிந்தனர்.*

*கைதேர்ந்த பதுங்கித் தாக்குதல், தீர்க்கமான திகைப்புத் தாக்குதல்கள் போன்ற சந்தேகத்திற்கிடமின்றி ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் இராணுவ உபகரணங்களையும் உணவுப் பொருட்களையும் கைப்பற்றும் நோக்கிலான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் எதிரியின் சிறிய படைப்பிரிவுகளை அவர்கள் அழித்தார்கள்.*

*ஒவ்வொரு படைப்பிரிவும் "தகவற்காரர்கள்" (பிரதேச மக்களிலிருந்து தகவல் தருபவர்களும் தொடர்பாளர்களும்) என அழைக்கப்படும் சொந்த வலையமைப்பொன்றைக் கொண்டிருந்தது. அரச வழங்கல்களிலிருந்தும் விவசாக உற்பத்தியாளர்களிடமிருந்தும்(இதுவும் பிரதேச மக்களே) கெரில்லாக்களுக்கான விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. காட்டிலிருந்து வருகின்ற கட்டளைக்கமைய, அவர்கள் மக்கள் மத்தியில் தேவைகளைப் பகிர்ந்தளித்தனர். பின்னர், உணவுப் பொருட்களையும் தீன்பண்டங்களையும் சேகரித்து, இந்த உணவுப்பண்டங்களைக் கெரில்லாக்களிடம் அனுப்பி வைத்தனர்.*

*குழுக்களாகச் செயற்படத் தொடங்கிய பின்னர்.பாதுகாப்பளிக்கின்றவிடயத்தில் மிகப் பிரதான கவனம் செலுத்தப்படத் தொடங்கியது. இந்நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட பாதுகாப்புச் சபை, கெரில்லாக்கள் மத்தியில் இருந்த உட்துறையமைச்சு மக்கள் சபையின் முகவர்களைக் கண்டறியும் பணியைச் செய்ததுடன், அதிருப்தியாளர்களையும் உறுதியற்றவர்களையும் இனங்கண்டது.*

*மக்கள் வாழ்விடங்களில் தமது முகவர்களைக் கொண்டிருந்த இச்சபை அங்குள்ள மக்களின் மனநிலையைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண்டது. சோவியத் அதிகாரத்துடன் தொடர்பைக் கொண்டிருக்கின்றவர்களில் அழிக்க வேண்டிய இலக்குகளை நியமித்தது. கொடூரமாக இலக்கைப் பின்தொடர்ந்து அதனை அழித்து ஏனையவர்களை அச்சமுறச் செய்தது. ஆரம்பக் கட்டங்களில் இவ்வாறான நடைமுறை கணிசமானளவு பெறுபேறுகளைக் கொடுத்தது. ஆனால், காலப்போக்கில், குறிப்பாக இந்நடைமுறை கிளர்ச்சியின் சமூகத் தளம் சடுதியாகச் சுருங்குவதற்கான காரணிகளில் ஒன்றாக மாறியதுடன், கிளர்ச்சியமைப்பு நிலையான கொள்கையமைப்பாக மாற்றமடையவும் செய்துவிட்டது.*


*படிப்படியாகக் கொள்ளையர்கள் காட்டுக்குள் மிக ஆழமாகச் சென்றனர். அத்துடன், மிக அரிதாகவே தீவிர நடவடிக்கைகளையும் திடீர்த் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். லித்துவேனியர்களைப் போலவே, உக்ரேனியத் தேசியவாதிகளும் சோவியத் கூட்டமைப்பின் மூலோபாய எதிரிகள் தமது தரப்பிற்காகக் குரல் கொடுக்கும் சாத்தியங்களை நம்பினார்கள். இதுவே போராட்டத்தின் அரசியல் நோக்கத்தை எட்ட முடியாதென்ற எண்ணத்தை அவர்களிடத்தில் தோற்றுவித்தது. ஆனாலும், நீண்ட காலத்திற்கு மந்தநிலையில் எதிர்ப்புப் பேணப்பட்டது.*

**தொடர்வான்....**

**நெற்றிபொறியன்**

# இலங்கைத்தீவில் தொடரும் அரச பயங்கரவாதம்

ஓய்வுபெற்ற நீதியரசர், முன்னாள் வடமாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்



**அரச பயங்கரவாதம் என்றால் என்ன?**

நாங்கள் பயங்கரவாதம் என்கிற சொல்லை பரிசீலித்துப்பார்த்தோமெனில், அதனது அர்த்தம் தங்களுக்கு சார்பான அரசியல் ரீதியான ஒரு முடிவைக் கொண்டுவருவதற்கு வன்முறையைப் பாவிப்பது தான் பயங்கரவாதம் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உண்மையிலேயே பயங்கரவாதத் தடைச்சட்டம் என்றால் என்ன என யாரும் விளக்கிக் கூறவில்லை. ஆனால் நாங்கள் பொதுவாகக் கூறப்போனால் அரசியலுக்கும் பயங்கரவாதத்துக்கும் தொடர்புகள் இருக்கிறது. அரசியல் ரீதியான முடிவுகளுக்காக பயங்கரவாதத்தை அல்லது வன்முறையைக் கையாள்வது. ஒரு நபரை இன்னொரு நபர் கொலை செய்கிறார். அவரைக் கொலை செய்தால் அது கொலை. வழக்கமான சட்டத்தின் கீழ் அது கொலை என்று கொண்டுவரப்படுகின்றது. ஆனால் அதே கொலையினை நாங்கள் பயங்கரவாதம் என்று ஆக்கும்போது. அந்தக் கொலையினை யார் செய்கின்றார்கள். அரசு தான் செய்கின்றது. அரசு தமக்குச் சார்பான சில சில நடவடிக்கைகள் அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரையிடுகின்றார்கள். காரணம் அவர்கள் தங்களது அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக நடந்துகொண்டபடியால் அவர்கள் வன்முறையைப் பாவித்தபடியால் அந்த வன்முறையினை பயங்கரவாதம் என்று கூறி அவர்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்துகின்றார்கள். இதேபோல அரசும் நடந்துகொள்ளும் போது அதனை நாம் அரச பயங்கரவாதம் என்று கூறுகின்றோம்.

அரசு எவ்வாறு அதனைச் செய்கின்றது என்றால், ஒரு பொறுப்புடன் நடந்துகொண்டிருக்கும் போது சட்டத்திற்குப் புறம்பான இராணுவ சட்டதிட்டங்களுக்கு எதிராக மக்களைக் கொன்று குவிப்பது எல்லாம் அரச பயங்கரவாதம். உதாரணத்திற்கு 2009 மே மாதம் 18ம் திகதிக்கு முன்னர் நடந்தது அதுதான். மக்கள் எல்லோரையும் அது ஒரு பாதுகாப்பான இடம் என்று கூறிவிட்டு, அந்த இடத்தில் குண்டுவீச்சு நடத்துவது. அவர்களைக் கொலை செய்வது. அவர்களுக்குரிய உணவு, மருந்துகளைக் கொண்டுவராது அவற்றை நிறுத்தி, குறைத்து அந்த காரணங்களால் மக்களைக் கொல்ல வைப்பது. இரசாயன வெடிகுண்டுகளைப் பாவித்து மக்களை மயக்கி அதனால் மரணிக்க வைப்பது. இவையெல்லாம் சர்வதேச இராணுவ சட்டதிட்டங்களுக்கு எதிரானது.

ஆகவே அவ்வாறான விடயங்களில் மக்களைக் கொலை செய்தமை தமிழ் மக்களை இல்லாமல் ஆக்கவேண்டும் அவர்களின் தொகையினைக் குறைக்கவேண்டும். வடகிழக்கு மாகாணங்களை சிங்கள அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். என்கின்ற அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தங்களது உரிமைகளைக் கேட்கின்றார்கள் என்று அவர்களுக்கு வந்த கோபத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுவது அரச பயங்கரவாதம் என்று கூறப்படுகின்றது. இப்போதும் அரச பயங்கரவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது பல விதங்களில். சட்டதிட்டங்களுக்கு அமைவாக தொல்பொருள் திணைக்களம், வனவிலாகா, வனவிலங்கு திணைக்களம் இவையெல்லாம் சட்டதிட்டங்களின் படி நடவடிக்கை எடுத்துக்கொண்டுபோகலாம். ஆனால் அந்த சட்டதிட்டங்களுக்குமேலாக தமிழ்மக்களுடைய காணிகளை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடும்போது அது அரச பயங்கரவாதமாக மாறுகின்றது. ஆகவே அரச பயங்கரவாதம் என்பது பயங்கரவாதத்தை அல்லது பயங்கரத்தை அல்லது வன்முறைகளை அரசியல் ரீதியான தமக்குச் சார்பான முடிவுகளை ஏற்படுத்தும் அல்லது பாதிக்கும், கடைப்பிடிக்கும் விதத்தைத்தான் அரச பயங்கரவாதம் என்று கூறுவோம்.

**இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பதையும் இதே கண்ணோட்டத்தில் பார்க்கலாம் என்பதும் உங்களுடைய கருத்தாக இருக்கிறது. அப்படித்தானே?**

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது அதற்காகத்தான் கொண்டுவந்தார்கள். அதாவது தங்களுக்கு எதிராக தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், யாராகவிருந்தாலும் தங்களது அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை, ஜேவிபியும் சேர்த்து, அரசாங்கத்தை விமர்சித்து, அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக, அரசாங்கத்தை ஆட்டங்காணவைக்கின்ற செயற்பாடுகளைச் செய்தால் அவர்களை யாராகவிருந்தாலும், இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து அவர்களை கொடுமைப்படுத்த முடியும் அல்லது பல காலத்திற்கு அவர்களை சிறையில் அடைக்க முடியும் என்ற அடிப்படையில் அந்த சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இச்சட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான விடயம் என்னவெனில் ஒருவர் கூறுகின்ற விடயத்தினைக் கொண்டு அவரை குற்றவாளியாக்க முடியும் என்கிற வாசகம் அந்த சட்டத்தில் இருக்கின்றது. எமது வழமையான நடைமுறைச் சட்டத்தில் குற்றமேற்பு வாசகங்களை சட்டம் ஏற்காது. குறித்த நபர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பொய்யினைக் கூட கூறியிருக்கலாம் அல்லது புரிந்துகொள்ளாமல் கூறியிருக்கலாம். இவ்வாறு பல காரணங்களுக்காக ஒருவர் குற்றமேற்பு வாசகங்களைக் கொடுக்க முடியும். பொதுவான சட்டம் அவ்வாறான காரணத்தை மாத்திரம் வைத்து ஒருவர் குற்றவாளி என ஏற்றுக்கொள்ளாது. ஆனால் அமெரிக்கா ஏற்றுக்கொண்டிருக்கிறது. என்னுடைய நாகமணி வழக்கில் அந்த குற்றமேற்பு வாசகத்தில் கூறப்பட்ட விடயங்கள் உண்மையில் நடந்ததுதானா? என்று சுதந்திரமான சில சாட்சியங்களை வைத்து முதலில் அதனை நிரூபிக்கவேண்டும் என்று நான் கூறினேன். நான் கூறுகிறேன் ஒரு வீட்டுக்கு குண்டுவீசப்பட்டது. ஆனால் இன்றும் அந்த வீடு அதே இடத்தில் இருக்கிறது. ஆனால் நான் கூறியதற்காக எனக்கு மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிக்கின்றார்கள். அதில் முதலில் போய் பார்க்கவேண்டும். உண்மையில் நான் கூறிய வீடு இருக்கிறதா அல்லது இல்லாமல் போய்விட்டதா என்று. ஆகவே இவ்வாறு இறுதிப்படுத்தல்கள் இல்லாமல் அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்படுகிறது. அது பிழை என நான் அந்த தீர்ப்பிலே எழுதியிருந்தேன். அதற்கு தகுதியான காரணங்கள் கொடுத்திருந்தேன். ஒருவர் பிழையான குற்றமேற்பு வாசகங்களைக் கொடுக்க எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால் அதைவிட இவ்வாறான கைதிகளைக் கொடுமைப்படுத்தி நீங்கள் இவ்வாறுதான் கூறவேண்டும் என்று கூறப்பட்டு இவ்வாறான குற்றமேற்புக்களை நீதிமன்றங்களுக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே அங்கும் பயங்கரவாதம் தான் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றதுசிறைக்காவலர்கள், பொலிசார், இராணுவம் எனப் பலர் இவர்களுக்கு பல பிரச்சினைகளை ஏற்படுத்தி நீங்கள் இந்தக் குற்றங்களை நீதிமன்றில் ஏற்றுக்கொண்டால் தான் நாங்கள் கொல்லாமல் விடுவோம். இல்லையெனில் கொலை செய்துவிடுவோம் என்றெல்லாம் சிக்கல்களை ஏற்படுத்தி அவர்கள் இந்த பயங்கரவாத சட்டத்தின் மூலமாக அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

**யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் இலங்கையில் அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமைக்கானக் காரணம் என்ன என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

காரணம் பதவியிலிருக்கும் அரசு தன்னைப் பாதுகாப்பதற்கும், அரசியல் ரீதியாக தனக்கு கெடுதல் விளைவிக்கும் அல்லது தங்களுக்கு எதிராக செயற்படுபவர்களை அல்லது வேறுவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை அவர்களது வாயினை அடைக்கவும் அவர்களைக் கொணர்ந்து சிறைகளில் அடைக்கவும் அவர்கள் ஊடாக தங்களுக்கு நட்டம் ஏற்படாமல் செய்யவும் தான் அவர்கள் இதனை இன்னமும் அமுலில் வைத்திருக்கிறார்கள். இந்த சட்டத்தை முன்னர் ஜேவிபியினருக்கு எதிராகவும், தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் அன்றிலிருந்து இன்றுவரை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சட்டம் ஆட்சியிலிருக்கும் அரசுகளையும் ஆட்டங்காணாமல் பாதுகாக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே தங்களது தேவைக்காக இந்தச் சட்டம் இன்னமும் அமுலில் உள்ளது. உலகம் முழுவதும் இதனை நீக்குமாறு வலியுறுத்துகின்றது. இந்த சட்டம் தொடர்பில் சர்வதேச அளவில் பேசப்படுகிறது. ஆனால் அரசு நீக்குகிறோம் இதற்கு மாற்றீடாக இன்னுமொரு சட்டத்தை கொண்டுவருகிறோம் என இழுத்தடிப்புச் செய்கிறார்கள் நீக்காமல். இதனை நீக்கினால் வெளிப்படையாக மக்களின் எதிர்ப்புக்கள் சர்வதேச அளவில் தெரிந்துவிடும். அவர்களுக்கு எதுவுமே செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே எதிர்ப்பவர்களை சிறைகளில் அடைக்கப்பார்க்கின்றார்கள். நான் கூறிய ஒரு கருத்து தொடர்பில் கூட பொலிசார் என்னிடம் வந்து வாக்குமூலத்தை பதிவுசெய்திருக்கிறார்கள். என் மீது வழக்கு பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகளிலும் இறங்கியிருக்கிறார்கள். இவையெல்லாம் எம்மைப் பயங்காட்டி உண்மைகளை வெளிக்கொண்டுவராமல் மூடிமறைப்பதற்கான நிகழ்ச்சிநிரலே. இவற்றையெல்லாம் செயற்படுத்துவதற்கு இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசு பயன்படுத்துகிறது.





# வீழ்ச்சியடையும் இலங்கை பொருளாதாரம்

அமைச்சிலே இருக்கக்கூடிய அமைச்சர்கள் உட்பட பிரதம மந்திரியும் கூறுகிறார் நாட்டினுடைய பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது என்று. பொருளாதார வீழ்ச்சி என்பது இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பிற்பாடு இப்படியானதொரு வீழ்ச்சி வந்ததில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக அவர் சில தடைகளைக் கொண்டுவந்தார். ஆனால் இப்பொழுது அது அல்ல விடயம். இப்போது வெளிநாட்டிலிருந்து எந்தப் பொருளையும் இறக்குமதி செய்வதற்கு அவர்களிடம் வெளிநாட்டுப் பணம் இல்லை. அந்நியச் செலாவணி என்பது இல்லை என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய பிரச்சினை. அந்நியச் செலாவணி இல்லாமல் போனது மாத்திரமல்ல இலங்கையினுடைய வங்கிகளையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் அளவிற்கு நிலைமைகள் போய்விட்டது. அடுத்த ஐந்து வருடத்துக்குள் கிட்டத்தட்ட 25 பில்லியன் அமெரிக்க டொலர்களை இவர்கள் வெளிநாடுகளுக்கு கொடுக்கவேண்டி இருக்கிறது. சராசரி ஒரு வருடத்துக்கு 05 பில்லியன் அமெரிக்க டொலர்களை இவர்கள் செலுத்தவேண்டும். இதனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றால் அதற்குரிய வருமானம் வரவேண்டும். வருமானம் இல்லை. வருமானம் எப்படி வரும்.

இலங்கையினது முழுமையான சுற்றுலாத்துறை ஒழுங்காக செயற்படவேண்டும். அதற்கான சூழ்நிலைகள் இல்லை. இலங்கையினது பொருளாதாரக்கொள்கை. ஏற்கனவே கொவிட் தொற்று பரவல் நிலைமை இருக்கும் போது, உரத்தை இறக்குமதி செய்யமாட்டோம் என்கிற முட்டாள்த்தனமான முடிவு இன்று இவர்களை பர்மாவிலிருந்து அரிசியினைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. சேதனப் பசளையினை ஊக்குவிப்பு செய்வதற்கு உர இறக்குமதி இல்லையென்று கூறினால், பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி சேதனப் பசளையைப் பயன்படுத்தியா விளைவிக்கப்பட்டது என்கிற கேள்வி எழுகிறது. எனவே இந்த அரசினுடைய திறமையினை நாம் எவ்வாறு கூறுவது? நான்கு மணித்தியாலத்திற்கு மின்சாரம் துண்டிக்கப்படலாம் என்று கூறுகிறார்கள். எங்களுக்கு இந்த மாதமே வாகனத்திற்கான எரிபொருளுக்கு தட்டுப்பாடு வரலாம் என்று கூறுகிறார்கள். சமையல் எரிவாயுவுக்குப் பிரச்சினை. மருந்துகள் இல்லை. எரிவாயு இல்லை. உரம் இல்லை. மின்சாரமும் இல்லை. எனவே ஒன்றையும் இல்லை இல்லை என்று கூறினால் இந்த நாடு எங்குபோய் முடியும். இப்போது ஏற்கனவே பெற்ற கடனை மீளச்செலுத்த மீண்டும் கடன் வாங்குகிறார்கள். வட்டியினையும் ஒரு பகுதி முதலையும் கட்டுவதற்காகவே இந்தக் கடன் வாங்கப்படுகின்றது. யார் ஆட்சிக் வந்தாலும் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவது என்பது இலகுவான காரியமல்ல. அவ்வளவு மோசமான நிலைக்கு பொருளாதார நிலைமையைக் கொண்டுபோய்விட்டார்கள். இதில் அடிப்படையான விடயம் என்னவென்றால் இது இன்றைக்கு நேற்றைக்கு தொடங்கிய விடயமுமல்ல. யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சீனாவிடமிருந்தும் ஏனைய நாடுகளிடமிருந்தும் இவர்கள் பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கினார்கள். எப்படிக் கடன் வாங்கினார்கள்? ஆயுதங்களாக, விமானங்களாகவெல்லாம் கடன் வாங்கினார்கள்.

அந்தக் கடன்களை மீள செலுத்த முடியாத பட்சத்தில் தான் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கட்டினார்கள். இந்தத் துறைமுகத்தால் நாட்டுக்கு இலாபம் இருக்கிறதா? அந்தத் துறைமுகத்திற்கு கப்பல் வருகிறதா? அது தேவையா? என்றால் தேவையில்லை. உங்களுக்கு கொழும்பில், காலியில், திருகோணமலையில், காங்கேசன்துறையில் துறைமுகம் இருக்கிறது. இவ்வளவு துறைமுகமும் இருக்கத்தக்கதாக ஏன் இன்னுமொரு துறைமுகம் ஹம்பாந்தோட்டையில் தேவையா? அதற்கு சீனா எத்தனை மில்லியன் செலவுசெய்து அதனைக் கட்டியது. அதுபோல ஹம்பாந்தோட்டையில் மத்தல என்கிற விமான நிலையம். அது தேவையா? உங்களுக்கு கட்டுநாயக்கா இருக்கிறது. அவசரத்துக்கு இரத்மலானை இருக்கிறது.

உண்மையில் உங்களுக்குத் தேவை என்றால் பலாலியைச் செய்திருக்கலாம். ஆனால் நீங்கள் அதனைச் செய்யமாட்டோம் என்கிற பின்னணியில் உங்களிடம் சண்டை பிடித்துத்தான் அதனது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மூடப்பட்டிருக்கிறது. கொமிசன் பெறுவதற்காகவே இவர்கள் திட்டங்களைத் தீட்டினார்கள். ஹம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தல விமான நிலையம் எல்லாம் கொமிசன் தான். ஆயிரம் ஆயிரம் கோடி எல்லாம் கொமிசன்களைப் பெற்றார்கள். ஆனால் அதனால் நாட்டுக்கு நன்மை இல்லை. இன்றைக்கு அந்தக் கடன்களைக் கட்ட முடியாமல் 99 வருடக் குத்தகைக்கு கடனை வாங்கியவர்களுக்கே கொடுத்துவிட்டார்கள்.

அது மாத்திரமல்ல. இன்றைக்கு இந்தியா, சீனா, பங்களாதேஸ் ஆகிய நாடுகளிடமிருந்து வாங்குகின்ற கடனாக இருக்கலாம். இது மிஞ்சிப்போனால் கடன்களைக் கட்டுவதற்கும் ஓரிரு மாத இறக்குமதிக்குமே போதியதாக இருக்கும் பணம். ஆக இவர்களால் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தலாம் என நாங்கள் எதிர்பார்க்கக்கூடாது. இந்த நாட்டில் மூன்று இலட்சம் இராணுவம் தேவையில்லை. முதலில் இராணுவத்தைக் குறைக்கவேண்டும். முதலில் இவ்வாறான விடயங்களைச் செய்து நாட்டிலே தேவையான விடயங்களுக்கு பணம் ஒதுக்குவதைப் பார்க்கவேண்டும். உங்களுடைய பொருளாதாரத் திட்டமிடல்களில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். யுத்தம் நிறைவுபெற்றதன் பின்னரும் இவ்வளவு தொகையான இராணுவம் இந்த நாட்டில் எதற்கு? ஆனால் இங்கு யுத்தத்திற்குப் பின்னர் தான் பாதுகாப்புத் தரப்பினரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இது நாட்டில் தேவையற்ற அவசியமற்ற செலவினங்களையே உருவாக்கும் திட்டமிடல்களாகும். இன்றைக்கு மட்டும் அதில் குறைப்பு இல்லை. இப்படியான மனநிலையில் இருப்பவர்களிடம் எவ்வாறு பொருளாதார மேம்படுத்தல்கள் குறித்து யோசிக்க முடியும் அல்லது பேச முடியும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் இலங்கையின் ஜனாதிபதியையும் இலங்கையின் அரசியற்போக்குகளையும் நம்பி அவர்களிடம் இலங்கையில் முதலீடு செய்வது குறித்து பேசுவது பிரச்சினை. ஏனெனில் நாளைக்கு இந்த முதலீடுகளை முடக்கமாட்டார்கள் என்பதற்கான எவ்வித உத்தரவாதமும் கிடையாது. ஏற்கனவே யாழில் பல முதலீடுகளில் பிரச்சினைகள் போய்க்கொண்டிருந்தது. அவை விடுதலைப்புலிகளுடையது என்றெல்லாம் பார்க்கப்பட்டது. அதனால் பல முதலாளிமார் துன்பப்பட்டார்கள். அப்படியான ஒரு சூழலில் மாகாண சபைகளுக்கு வெளிநாட்டில் இருந்து முதலீடுகளை எடுக்கின்ற அதிகாரம் வழங்கப்பட்டால் அதனை நாங்கள் கேட்டுப்பார்க்கலாம். அப்படியெனில் மாகாணம் தான் அவர்களுக்கு பொறுப்பாக இருக்கவேண்டும் மத்திய அரசு அல்ல.

இலங்கையினுடைய முட்டாள்தனமான வெளிநாட்டுக்கொள்கைகள் தான் எல்லாவற்றுக்கும் காரணம். இங்கு அழுத்தங்கள் அல்ல பிரச்சினை. இலங்கை ஒரு நாட்டின் மீது மாத்திரம் நம்பிக்கை வைத்து அவர்களுக்கு அதீத முக்கியத்துவங்களைக் கொடுத்து அந்த நாட்டினது செல்வாக்குக்கு உட்பட்டு இலங்கை வருகின்றபோதுதான் ஏனைய நாடுகளினது அழுத்தங்கள் வரப்பார்க்கும். அவ்வாறான சூழ்நிலைக்கு கொண்டுசென்றது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்பட்ட தவறுதான் அன்றி வேறொன்றுமில்லை. அதேபோல இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கைகளும் மாறவேண்டும். ஆட்சிமாற்றம் இதற்கு உதவியாக இருக்கலாம் ஆனால் ஆட்சிமாற்றம் வந்தவுடன் எல்லாம் மாறிவிடும் என்று கற்பனை செய்தால் அது முட்டாள்த்தனம்.

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்





# வடகிழக்குஇணைப்பு 13வது திருத்தம் மாகாணசபை தேர்தல் நடப்பது என்ன?

## முன்னாள் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன்

**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையில் மிக முக்கியமாக பேசப்படும் விடயமாக 13 ஆம் திருத்த சட்டம் அல்லது மாகாண சபைகள் மீள் இயக்கப்படுமா மாகாணசபைத் தேர்தல் இடம்பெறுமா முஸ்லிம்களுடன் ஒரு இணைவை ஏற்படுத்தி தான் வடகிழக்கிணைந்த ஒரு தமிழர் தாயகத்தை மீட்டுக்கொள்ள முடியும் என்பது சில தமிழ் தரப்புக் கட்சிகளுடைய பேச்சுக்களாக இருக்கிறது. அண்மையிலும் அதற்கான ஒரு கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக நீங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் கிழக்கை பிரதிபலிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் உங்களது நிலைப்பாடு எப்படியிருக்கின்றது?**

பதில் : உண்மையிலே வடகிழக்கிணைந்த ஒரு அரசியல் தீர்வை பெறுவது தான் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளாக இருந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக தந்தை செல்வா அவர்களால் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியாக இருந்து இன்று வரை அதற்கு பிற்பட்ட காலப்பகுதியிலே போராட்டங்கள் ஆயுதப் போராட்டங்கள் போன்றன இடம்பெற்ற சூழலிலும் தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் பரப்பாக வந்த சூழலிலும் ஒருமித்த கருத்தாக இருப்பது 74 வருடங்களாக வடகிழக்கு தாயகம் என்பது தமிழ் பேசும் மக்களாக ஒன்றிணைந்து இஸ்லாமிய மக்களும் தமிழ் மக்களும் இணைந்து ஒரு அரசியல் தீர்வை பெறவேண்டும் என்ற ஒரு விடயத்திற்காகத்தான் இந்த அனைத்து போராட்டங்களும் அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் இடம்பெற்றது.

ஆனால் தற்பொழுது இருக்கின்ற சூழலில் பல்வேறுபட்ட சர்ச்சைகள் பல்வேறுபட்ட கட்சிகளாக பரிநாமித்து முஸ்லிம் கட்சிகள் அல்லது தமிழ் கட்சிகள் அல்லது தமிழ் தேசிய கட்சிகளாக இருக்கலாம் தற்பொழுது வடகிழக்கிலே தமது அரசியல் நிலைப்பாடுகளை ஜனநாயக முறையிலே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த நேரத்திலும் கூட தற்பொழுது 13வது அரசியல் அமைப்பு 1981 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டு வந்த பொழுது அதை முழுமையாக அதில் அதிகாரப்பகிர்வு இல்லையென்று அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்த இப்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சியாக இருக்கின்ற அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அப்பொழுது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ரெலோ போன்ற அமைப்புக்கள் அனைத்துமே அதை எதிர்த்து முதலாவது தேர்தலில் கூட போட்டியிடாத வரலாறும் இருந்தது. ஆனால் தற்பொழுதிருக்கின்ற சூழலில் நாங்கள் 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலே நாங்கள் போட்டியிடாவிட்டாலும் 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. அதுபோன்று 2013 வட மாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிட்டது. அதன் பின்னர் தற்பொழுது மாகாணசபைகள் அனைத்தும் கலைக்கப்பட்டு தற்பொழுது பல வருடங்களாக அதிகாரமற்ற ஒரு சூழலில் இருந்து கொண்டிருக்கின்றது. உண்மையில் 13வது அரசியல் யாப்பில் கூறப்பட்ட விடயங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்பது ஒரு விடயம். இரண்டாவது விடயமாக தற்பொழுது இருந்த மாகாணசபைத் தேர்தல்களும் பிற்போடப்பட்டுக் கொண்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த நேரத்தில் தான் இந்த தமிழ் கட்சிகளின் ஒரு கூட்டு முயற்சியாக இந்திய பிரதமருக்காக ஒரு ஆவணத்தை தயாரித்து அனுப்பும் முயற்சி எடுத்தாலும் கூட அதிலே ஆரம்பத்திலே தமிழ் தேசிய கட்சிகளாக இருந்த தமிழ் தரப்புக்களும் இஸ்லாமிய கட்சிகளில் ஒருசில கட்சிகளும் அதைவிட மலையக மக்கள் இருக்கின்ற ஒரு சில கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு முடிவை எடுத்திருந்தாலும் அதிலே சில கோரிக்கைகள் சில விடயங்களை வடகிழக்கிணைப்பு சம்பந்தமாக அல்லது சமஷ்டி தீர்வு அடிப்படையிலான தீர்வை ஏற்க முடியாது அல்லது எதிர்க்க முடியாது ஆனால் எங்களால் எதிர்ப்பதால் ஏனைவர்களுக்கு அது பாதகமாக இருக்கும் என்ற காரணத்தைக் கூறி மலையக கட்சிகளும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதிலே கையொப்பமிடுவதற்கு தவறி அதிலிருந்து விலகிவிட்டார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் மலையக கட்சியை பொறுத்தவரையில் அது வடகிழக்கிற்கு அப்பால் இருந்த கட்சியாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்கள் தமிழ் பேசும் மக்களாக இருக்கக்கூடிய இஸ்லாமிய மக்களும் தமிழ் மக்களும் இணைந்து அதை இணைந்த ஒரு வடகிழக்கிற்கான தீர்வை கொண்டுவருகின்ற போது மட்டும் தான் முஸ்லிம்மக்களின்பாதுகாப்பும்தமிழ்மக்களின் பாதுகாப்பும் அதில் உறுதிப்படுத்தப்படும். இதை முஸ்லிம் தலைவர்கள், இஸ்லாமிய புத்திஜீவிகள், இஸ்லாமிய மதத் தலைவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் வடகிழக்கை பிரித்து வடக்கு கிழக்கு என்ற ஒரு அரசியல் பிரிவை அல்லது ஒரு அதிகாரத்தை நாங்கள் கொடுத்தாலும் கூட எதிர்காலத்தில் இஸ்லாமிய மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலே கிழக்கு மாகாணத்தில் ஒரு குரோதமான மனப்பாங்கு தோன்றுகின்ற நிலைமை தொடர்ச்சியாக இருந்து கொண்டிருக்கும். இதை தடுக்க வேண்டுமாக இருந்தால் இஸ்லாமிய கட்சிகள் அனைத்தும் வடகிழக்கிலே இருக்கின்ற கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு தீர்வை பெறுவதற்கு தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து பயணிப்பது பொறுத்தமான நல்லதான ஒரு விடயமாகத்தான் அதனை நான் பார்க்கின்றேன். அவ்வாறான முயற்சிக்கு அவர்கள் வருவார்களா என்பது எனக்கு சந்தேகமாகத்தான் தற்பொழுதும் இருக்கின்றது.

**கேள்வி : பூகோள அரசியல் ரீதியாக சில அழுத்தங்கள் இருப்பதன் காரணமாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் தரப்பையும் இணைத்து வடகிழக்கில் 13ஆம் திருத்த சட்டத்தை நிறைவேற்றக்கூடிய மாகாணசபையை நடத்த வேண்டும் என்ற வலியுறுத்தல் ஏற்படுத்தப்படுகின்றது என்று கூறப்படுவது உண்மையா?**

பதில் : இல்லை பூகோள அரசியல் நிலைமை வருவதற்கு முன்பிருந்தே தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் இணைந்துதான் ஒரு தீர்வை பெறவேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த ஒன்றாகத்தான் அது இருக்கின்றது. ஆனால் 2009 மே 18 முள்ளிவாய்க்கால் மௌனத்திற்கு பிற்பட்டகாலம் என்பது தற்பொழுது சர்வதேச மயப்படுத்தப்பட்ட அரசியலாக வடகிழக்கு தமிழ் தேசிய அரசு மாற்றப்பட்டுவிட்டது. பேசும் பொருளாக சர்வதேசத்திலே தமிழ் மக்களுக்காக ஒரு நாடு கிடைக்காவிட்டாலும் தமிழ் தேசியம் தொடர்பான பார்வை அல்லது அது தொடர்பான ஒரு சிந்தனை தற்பொழுது சர்வதேசமயப்படுத்தப்பட்ட இடத்தில் சர்வதேசம் ஊடாக பூகோள அரசியலிலேயே தங்கியிருக்கின்றது. இந்தியாவின் பங்களிப்பு என்பது இல்லாமல் சர்வதேசம் எந்தவித தீர்வையும் வடகிழக்கு மக்களுக்காக அரசியல் தீர்வை கொண்டுவர முடியாது அல்லது கொண்டுவர மாட்டாது என்ற ஒரு பார்வை அனைத்து இடங்களிலும் இருக்கின்றது.

எனவே இதில் தற்பொழுது பூகோள அரசியல் தமிழ் தேசிய கூட்டமைப்பு இஸ்லாமிய மக்களையும் அழைத்துக்கொண்டு போகின்றது என்பது தவறான கருத்து. அதற்கு முன்பே தமிழ் தேசிய கூட்டமைப்பு பல முயற்சிகளை வடகிழக்கிலே இருக்கின்ற இஸ்லாமிய கட்சிகளையும், மக்களையும் அழைத்து செல்ல வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக செயற்பட்டது அதிலே நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறுபட்ட சுற்றுப் பேச்சுவார்த்தை அப்பொழுது சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒருமித்து செயற்படுவதற்கான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டது. ஆனால் இஸ்லாமிய கட்சிகள் சில விட்டுக்கொடுப்புக்கள் அல்லது அதை ஏற்றுக்கொள்ளாத நிலையிலே அது இழுபறியாக இருந்து கொண்டு தற்பொழுதும் அது தொடர்கதையாக இருக்கின்றது அதுதான் உண்மை.



# பயங்கரவாத தடைச்சட்டமும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோரும் ஒரு இனத்தை அழிப்பதற்கான இராஜதந்திர வழியா?




ஈழ விடுதலைப் போராட்டம் என்பது 3 தசாப்தங்களை கொண்ட ஒரு நீண்ட வரலாறு. குறிப்பாக சர்வதேச ரீதியாக இடம்பெற்ற யுத்தங்களை பார்க்கின்ற பொழுது ஓரிரு நாடுகளை தவிர ஏனைய நாடுகளில் மனிதாபிமானம் பேணப்பட்டு வந்தது. அல்லது எதிரியை மட்டும் தாக்குகின்ற ஒரு நிலைப்பாடும் பேணுப்பட்டுவந்தது. ஒருசில நாடுகளில் மனித கேடயமாக மக்கள் பாவிக்கப்பட்டுவந்தார்கள். இதற்காகவே சர்வதேச ரீதியாக போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டும் வந்திருக்கின்றன. இனப்படுகொலை என்பது வேறு போர் குற்றம் என்பது வேறு ஒரு இனத்தை குழுவாகவோ இனமாகவோ அழித்தால் அது இனப்படுகொலை இதனுள் 5 வரையரைகளும் அடங்குகின்றன. பட்டினி போட்டு கொல்லுதல், விச வாயுவை அடித்துக்கொல்லல், கட்டாய கருத்தடை, கட்டாய மதமாற்றம் என்பனவாகும். போர்க்குற்றம் என்பது ஒரு யுத்தம் இடம்பெறுகின்ற பொழுது அது மனிதாபிமானமற்ற முறையில் அல்லது சரணடைந்தவர்களை கொல்லுதல் நிலைகளை கைப்பற்றுவதாக மக்களை மனிதக் கேடயங்களாக கையாண்டு அவர்களை கொன்று குவித்தல் போன்ற விடயங்கள் போர்க்குற்ற விசாரணைகளில் முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் மட்டும் 1 இலட்சத்து 40 ஆயிரம்பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்று மறைந்த முன்னாள் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் அவர்கள் தெரிவித்திருந்தார். இவருடைய கருத்தினால் இலங்கை அரசு அதிருப்தி அடைந்தது மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் இதற்கானதொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக இந்த 1 இலட்சத்து 40 ஆயிரம் பேருக்குள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் என்ற வரையறைக்குள்ளேயே உட்படுத்தப்படுகின்றார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு திருகோணமலை வன்னி மாவட்டம் யாழ் மாவட்டம் போன்ற தமிழ் பிரதேசங்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு தமது உறவினர்களை தேடி கடந்த 5 வருடகாலங்களாக அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். குறிப்பாகஇந்தஅடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குபற்றிய பலர் பெற்றோர் உறவினர்கள் இறந்து போய் விட்டார்கள். மகனை காணவில்லை என்ற ஏக்கத்துடன் இன்னும் பலர் நடைபிணங்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இதிலும் குறிப்பாக ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்ற விவகாரம் என்பது இன்று ஐக்கியநாடுகள்சபையில்பாரியஒருஇனஅழிப்பு விடயமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை அரசை பொறுத்தவரையிலே இந்த நாட்டில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும் இங்கு இடம்பெற்றது போர்க்குற்றம் என்றும் அது பயங்கரவாதிகளுடனான யுத்தம் என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இறந்த உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்த இந்த நாட்டில் தற்பொழுது தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்தகால நல்லாட்சி அரசியலில் இறந்த உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கியிருந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் அது மறுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நாட்டில் ஜனநாயகம் மீறப்பட்டுள்ளது என்பது இன்றைய யதார்த்தம். ஒன்று இந்த நாட்டில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த அரசாங்கம் செயற்படவேண்டும். அனைவரும் இறந்து விட்டார்கள் அல்லது அவர்களுக்கான மரண சான்றிதழ்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தொடர் போராட்டமானது அல்லது அதனை ஏதோவொரு தீர்வு அடிப்படையில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அல்லது நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்போராட்டம் நீடித்து செல்வதால் எந்தவித பயனும்அற்ற ஒரு நிலைமை உருவாகும் வாய்ப்பு இருக்கின்றது. அதேவேளை இப்போராட்டத்திற்கான வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர் சங்கத்தின் உறவுகள் தொடர் போராட்டங்களை அரசிற்கு எதிராக நடத்திவருகின்றனர். இலங்கை அரசை பொறுத்தவரையில் தமிழினம் பயங்கரவாதிகள் என்ற தோரணையிலேயே அந்த கண்ணோட்டத்திலேயே உற்றுநோக்கிக்கொண்டிருக்கின்றது.

1983 - 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களின் விபரங்களை எடுத்துக்கொண்டால் அதன் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும். சரணடைந்தவர்களை கொலை செய்வது என்பது உலக சட்ட திட்டங்களுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையும் ஏற்றுக்கொள்ளாத ஒரு விடயமாகும். இலங்கையை பொறுத்தவரையில் ஆசிய பிராந்தியத்தில் கூடுதலாக கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோர் பட்டியலில் இலங்கை முதலிடத்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அரசியலை பொறுத்தவரையில் மதவாத இனவாத தேசியவாத அரசியல் தொடர்கின்ற அதே நேரம் அரசியல் கட்சிகளின் மாறுபட்ட செயற்பாடுகள் அல்லது தமிழ் கட்சிகளுடைய மாறுபட்ட போக்கு தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை அல்லது இலக்கை அடையமுடியாத ஒரு சூழல் காணப்படுகின்றது.

குறிப்பாக கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அல்லது கணவனை இழந்த மனைவிகள் வடகிழக்கில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இருக்கின்றார்கள். இவர்களின் வாழ்வாதார பிரச்சனை கேள்விக்குறியாக இருக்கின்றது. சமுதாயத்தில் இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஏராளம். காணாமலாக்கப்பட்டவர்கள் இல்லையென்று ஒரு பதிலை இலங்கை அரசு வழங்குமாக இருந்தால் அடுத்த கட்டமாக குறித்த விதவைகள் தமக்கான ஒரு முடிவை வாழ்வியல் பிரச்சனைகளை கையாள்வதற்கு அது சுலபமான வழிமுறைகளை தோற்றுவிக்ககூடியதாக அமையும். கூடுதலானவர்கள் மறுமணம் முடித்து வாழுகின்ற சூழலும் உருவாகியுள்ளது. இதனால் குடும்பங்களுக்குள் குழப்ப நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இக் குடும்பத்தில் இருக்கின்ற அங்கத்தவர்களின் நிலைமைகளும் மிக மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றது.

இதனோடு மற்றுமொரு விடயமாக முன்னாள் போராளிகள் சமூகமயப்படுத்தப்பட்ட பொழுதிலும் அவர்களுடைய தொழில் வாய்ப்பு சம்பந்தப்பட்ட விடயங்களும் அரசாங்கத்தினால் வேனும் என்று பழிவாங்கப்படுகின்றது. 19 வயதில் ஆயுதப்போராட்டத்திற்கு இணைந்துகொண்ட போராளிகள் போர் முடிவில் 35, 40 வயதை கடக்கும் பொழுது அவர்கள் பட்டறிந்த பாடங்களே அவர்களின் வாழ்வில் கைகொடுக்கின்றது. கா.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடையாதவர்களுக்கு வேலை வாய்ப்பில்லையென ஒதுக்கி வைக்கின்ற பொழுது இவர்களுக்கான அடுத்தகட்ட வாழ்வாதார நிலைமைகள் என்ன என்பது பற்றியும் அரசு கண்ணோக்கியிருக்க வேண்டும். போருக்கு பின்னரான சூழ் நிலைகளை உற்றுநோக்குகின்ற பொழுது தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பது ஒருபுறத்தில் வைத்தாலும் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் அவர்களும் சுயகௌரவத்துடன் வாழ்வதற்கான நிலைமைகளை அரச தரப்பு மேற்கொள்ள வேண்டும். பழிவாங்கும் இனவாத அரசியலை தொடர்ந்துவரும் அரசியல் தலைவர்களும் மேற்கொண்டு வந்தார்கள் என்பது வரலாறு அந்த வரலாறு இன்றும் தொடர்கின்றது.

கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவினர்களுடைய குடும்பங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடல் காயங்களுடன் ஊனமுற்றவர்களாக ஆயிரக்கணக்கில் இன்னும் வாழ்ந்துவருகின்றார்கள். யுத்தத்தால் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். தற்பொழுது இந்த நாட்டில் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்த நாட்டிற்கு கொண்டு வந்து முதலீடு செய்வதற்கு அரசாங்கம் போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை. மாறாக அவர்களின் வங்கிக் கணக்குகள் சோதனை செய்யப்பட்டு அவர்கள் பணங்கள் பறிமுதல் செய்யப்பட்ட வரலாறுகளும் இருக்கின்றன.

எனவே அரசை பொறுத்தவரையில் இந்த நாட்டில் தொடர்ந்தும் பயங்கரவாதம் இருப்பதை சொல்லிவருகின்றது அல்லது பயங்கரவாதம் இருப்பதை போன்று ஆங்காங்கே தாக்குதல்களை நடத்தி ஒரு பரபரப்பை ஏற்படுத்தி சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக இன்னும் இலங்கையில் பயங்கரவாதிகள் இருக்கின்றது என்ற செயற்பாடுகளை செயற்படத்தி வருகின்றது. ஈஸ்டர் குண்டுவெடிப்புக்களின் போது ஆயிரக்கணக்கானோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களும் முறைப்படி விசாரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பலரே கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டும் உள்ளார்கள் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே இவர்களுக்கான உடனடி தீர்வாக அரசு என்ன செய்யப்போகின்றது என்பது இன்று சர்வதேச ரீதியாகவும் எழுப்பப்பட்டுள்ள ஒரு கேள்வியாகும். ஆட்சி மாற்றம் ஏற்படுவதால் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை பற்றியோ அல்லது கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் விடுதலை செய்யப்படுவார்கள் என்றோ நினைத்துவிட முடியாது. இனவாத போக்கை என்று மாறி மாறி வரும் அரசாங்கங்கள் கைவிடுகின்றதோ அன்று தான் இதற்கான தீர்வு எட்டப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆகவே அரச இயந்திரங்கள் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்பட வேண்டும் என்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

**துரியோதரன்**



# பிராந்திய செய்திகள்



## இலங்கையின் முதலாவது அரபு மொழிப் பேராசிரியராக கலாநிதி எம்.எஸ்.எம். சலீம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய நாகரீகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் அரபு மொழி பேராசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். இப்பதவியுயர்வு அரபு மொழியில் இவர்களுக்குள்ள புலமைத்துவத்துக்குக் கிடைத்த கௌரவமாக கொள்ளப்படுகின்றது.



இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம் மாவடிப்பள்ளி முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதய கமுஃ அல் - அஸ்றப் மஹா வித்தியாலயம்) தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்து அங்கேயே ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து. பின்னர் கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியில் கற்றதன் பின்னர் இந்தியாவின் லக்னோ தாருள் உலூம் நத்வதுல் உலமா அரபுக் கல்லாசாயின் அரபு மொழி மற்றும் இலக்கிய பீடத்தில் கற்று முதலாம் நிலை அதிவிஷேட சித்தியுடன் தனது இஸ்லாமிய கற்கையை நிறைவு செய்தார். 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரும் சீர்திருத்தவாதியுமான அல்லாமா அபுல் ஹஸன் நத்வி அவர்களின் நேரடி மாணவராக பேராசிரியர் இருந்துள்ளமை விஷேட அம்சமாகும்.

1999ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் எம்.எஸ். எம். சலீம் அவர்கள் 2002 இல் அரபு மொழியில் விஷேட இளங் கலைமானிப் பட்டத்தை பெற்றார். 2004 ஆம் ஆண்டு அரபு மொழியில் முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு, 2012 ஆம் ஆண்டு உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியியலில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தார். பேராசிரியரின் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக்கு விஷேட திறமையை வெளிப்படுத்தியதற்கான திறமை விருது பல்கலைக்கழகத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டிய அம்சமாகும்.

## அதிவேக வீதியில் விபத்து – கடுமையான போக்குவரத்து நெரிசல்!

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கஹதுடுவவிலிருந்து கொட்டாவை நோக்கி பயணித்த சில வாகனங்கள் இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி உள்ளதாக அததெரண செய்தியாளர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பாரிய தீ விபத்து

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அன்று (20) நள்ளிரவு 11.45 மணியளவில் ஏற்பட்ட பாரிய தீ விபத்து பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒரு பகுதியில் பாரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டு குறித்த தீ விபத்து கரைச்சி பிரதேச சபையில் தீயணைப்பு பிரிவினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடர்ந்து இராணுவ தீயணைப்பு பிரிவினரும் களத்தில் இறங்கி மேலும் தீ பரவாத வகையில் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

குறித்த தீ விபத்து சம்பவத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர், இராணுவ உயர் அதிகாரிகளின் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்கள் கண்காணிப்பில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வரும் நிலையில் குறித்த விபத்தினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





## எச்சரிக்கை – மேல் மாகாணத்தில் அதிகரிக்கும் டெங்கு!

2022 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்கு மேலதிகமாக அதிகரித்திருப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.




அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதுதொடர்பாக இந்த பிரிவின் வைத்தியர் இந்திக வீரசிங்க தெரிவிக்கையில், படிப்படியாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை காணக்கூடியதாக இருப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக வைத்தியர் இந்திக வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

## பாலின் கொள்வனவு விலை அதிகரிப்பு

பால் பண்ணையாடாளர்களிடம் இருந்து பாலை கொள்வனவு செய்வதற்கான விலையை அதிகரிக்க மில்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் ஒரு லீற்றர் பாலின் கொள்வனவு விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு பிப்ரவரி 1 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் என மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல்

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 ஆக மாற்றியமைத்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## தனியார் மது விடுதி முழுமையாக தீயில் எரிந்து நாசம்



வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் மது விருந்தகத்தில் அன்று20.01.2022 அதிகாலை மூன்று மணியளவில் திடீரென தீப்பற்றி எறிந்தமையினை அடுத்து தீயணைப்பு பிரிவினர் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் வெளியில் சத்தம் கேட்டதினை அவதானித்த அயலவர்கள் வெளியில் சென்று பார்வையிட்ட சமயத்தில் குறித்த மதுபானசாலையில் தீப்பற்றியேறிந்தமையினை அவதானித்துள்ளனர். அதனையடுத்து உடனடியாக செயற்பட்ட அயலவர்கள் நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் ஒரு மணிநேர போராட்டத்தின் பின்னர் தீயினை சிறிதளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் கட்டிடத்தின் மேல்பகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மேலும் விரைந்து செயற்பட்ட இலங்கை மின்சார சபையினர் குறித்த பகுதிக்கான மின்சாரத்தினை துண்டித்துள்ளதுடன் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மதுபானசாலை கட்டிடத்தினுள் இருந்து வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் உள்ளமையினால் தீயினை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



# சினிமா துளிகள்



## விவாகரத்து இல்லை... சண்டைதான் - தனுஷ் தந்தை

பிரபல இயக்குனரும், தனுஷின் தந்தையுமான கஸ்தூரி ராஜா, தனுஷ் ஐஸ்வர்யா இருவரின் விவாகரத்து குறித்து பேசி இருக்கிறார்.

தமிழ் திரையுலகின் பிரபல டைரக்டர்களில் ஒருவர், கஸ்தூரி ராஜா. இவருக்கு 2 மகன்களும், 2 மகள்களும் இருக்கிறார்கள். மூத்த மகன், டைரக்டர் செல்வராகவன். இரண்டாவது மகன் தனுஷ். இவருக்கும், நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யாவுக்கும் கடந்த 2004-ம் ஆண்டில் திருமணம் நடந்தது. இது, பெற்றோர்கள் சம்மதத்துடன் நடந்த காதல் திருமணம் ஆகும். மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தி வந்த இவர்களுக்கு யாத்ரா, லிங்கா என 2 மகன்கள் இருக்கிறார்கள். மூத்த மகன் யாத்ராவுக்கு 15 வயது ஆகிறது.

இந்த நிலையில் தனுஷ், ஐஸ்வர்யா இருவரும் பிரிந்து விட்டார்கள். இரண்டு பேரும் விவாகரத்து செய்யப்போவதாகவும், இனிமேல் இருவரும் தனித்தனி பாதைகளில் பயணிக்கப்போவதாகவும் அறிவித்தார்கள். இதுபற்றி தனுசின் தந்தையும், டைரக்டருமான கஸ்தூரிராஜா கூறியதாவது

"தனுசும், ஐஸ்வர்யாவும் கருத்து வேறுபாடு காரணமாக சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது, கணவன்-மனைவி இடையே நடக்கும் வழக்கமான குடும்ப சண்டைதான். இருவரும் விவாகரத்து செய்யவில்லை. இரண்டு பேருமே இப்போது சென்னையில் இல்லை. ஐதராபாத்தில் இருக்கிறார்கள். நான் போனில் தொடர்புகொண்டு பேசினேன். இருவருக்கும் சில அறிவுரைகளை சொன்னேன்" என்றார்.






சமீபத்தில் வெளியாகிய ரவுடி பாய்ஸ் படத்தில் நடித்த அனுபமா பரமேஸ்வரன் ஒரு முத்தக்காட்சியில் நடிக்க ரூ.50 லட்சம் வாங்கியதாக கூறப்படுகிறது.

சினிமா துறையில் கவர்ச்சிக்கும், முத்தக்காட்சிகளுக்கும் மறுத்த பல நடிகைகள் அவர்களுடைய வாய்ப்பை இழந்து பிறகு அது போன்ற காட்சிகளில் நடித்திருக்கின்றனர். இந்த பட்டியலில் நடிகை அனுபமா பரமேஸ்வரனும் தற்போது இணைந்துள்ளார்.

2015-இல் வெளியான பிரேமம் படத்தின் மூலம் அறிமுகமாகி முன்னணி நடிகைகளில் ஒருவராக சேர்ந்தவர் அனுபமா. இவர் தனுஷ் நடித்த கொடி படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தார். பல மொழி படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

திரிவிக்ரம் இயக்கத்தில் வெளியான அ ஆ தெலுங்கு படத்தில் சமந்தாவும் அனுபமா பரமேஸ்வரனும் கதாநாயகியாகளாக நடித்தனர். நல்ல வரவேற்பை பெற்ற அந்த படம் அனுபமாவிற்கு முக்கிய படமாக அமைந்தது. அதன் பிறகு அவருக்கு வந்த பல படவாய்ப்புகளில் கதாநாயகனுடன் நெருக்கமாக நடிக்கும் காட்சிகள் மற்றும் முத்தக்காட்சிகள் இருந்ததால் அப்படங்களை அவர் நிராகரித்ததாக கூறப்படுகிறது.

தற்போது பிரபல தயாரிப்பாளர் தில் ராஜீவின் சகோதரர் மகன் கதாநாயகனாக நடித்து சில தினங்களுக்கு முன்பு வெளியான படம் ரவுடி பாய்ஸ். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக அனுபமா நடித்திருந்தார். இந்த படத்தில் அனுபமா முத்தக்காட்சியில் நடித்திருக்கிறார். இந்த முத்த காட்சிக்காக பிரத்யேகமாக அவர் ரூ.50 லட்சம் வாங்கியதாக கூறப்படுகிறது. முதலில் இதில் நடிக்க மறுத்த அவர் ரூ.50 லட்சம் தருவதாக சொன்னதும் ஒப்புக்கொண்டாராம்.

அரைகுறை ஆடையில் அதிக கவர்ச்சி காட்டுவது, முத்த காட்சி போன்றவற்றில் நடிக்க இதுவரை மறுத்து வந்த அனுபமா பரமேஸ்வரன், தற்போது முத்த காட்சியில் நடித்து உள்ளார்.

## திரிஷா, ராய் லட்சுமியை தொடர்ந்து அமலாபாலுக்கு 'கோல்டன் விசா'

மோகன்லால், மம்முட்டி, துல்கர், திரிஷா, ராய் லக்ஷ்மி போன்ற பலருக்கு வழங்கப்பட்ட கோல்டன் விசா தற்போது அமலாபாலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமீரக அரசு கடந்த 2019-ம் ஆண்டு விசா வழங்கும் நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தது. இதன் ஒரு பகுதியாக அமீரகத்தில் வசிக்க விரும்பும் வர்த்தகர்கள், விளையாட்டு வீரர்கள், திரைபிரபலங்கள், முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்டோர் அமீரகத்தை சேர்ந்த நிறுவனம் அல்லது தனி நபர் ஆதரவு இல்லாமல் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு வசிக்கும் வகையில் கோல்டன் விசா அறிமுகம் செய்யப்பட்டது. இந்த விசாவானது புதுப்பித்துக் கொள்ளும் வசதி கொண்டது ஆகும்.

ஏற்கனவே நடிகர்கள் ஷாருக்கான், சஞ்சய்தத், மோகன்லால், மம்முட்டி, டோவினோ தாமஸ், தயாரிப்பாளர் போனி கபூர், டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பிருத்விராஜ், துல்கர் சல்மான், பார்த்திபன், திரிஷா, ராய் லட்சுமி ஆகியோருக்கு கோல்டன் விசா வழங்கிய அமீரக அரசு, தற்போது பிரபல நடிகை அமலாபாலுக்கு கோல்டன் விசா வழங்கி உள்ளது.

இதுகுறித்து நடிகை அமலா பால் கூறுகையில் கோல்டன் விசா பெற்றதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக ஐக்கிய அரபு அமீரக அரசுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன் என்றார். இவர் மைனா, சிந்துசமவெளி, விஜபி உள்பட ஏராளமான தமிழ் மற்றும் மலையாள படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## உலகளாவிய சமுதாய ஆஸ்கர் விருது வாங்கும் சூர்யா—ஜோதிகா, உதயநிதி ஸ்டாலின்



சூர்யா-ஜோதிகா, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உலகளாவிய சமுதாய ஆஸ்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மனித சமூகங்களை வலுப்படுத்துவதில் உரிய பங்களிப்புகளை கொடுத்து, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் சர்வதேச மற்றும் சமூக கதாநாயகர்களை அடையாளம் கண்டு உலகளாவிய சமுதாய ஆஸ்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், 11-வது பாராளுமன்ற உலகளாவிய சமுதாய ஆஸ்கர் விருதுக்குரிய 4 பிரிவுகள் பட்டியலை அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினராக இருக்கும் டேனி கே டெவிஸ் வெளியிட்டுள்ளார்.

இதில், ஜெய்பீம் படத்தின் தயாரிப்பாளர்கள் நடிகர் சூர்யா மற்றும் ஜோதிகாவுக்கு 2021-ம் ஆண்டின் மதிப்புமிக்க விருது அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மை கதையை மையமாக கொண்டு சமூக நீதியை முன்னிறுத்தி வெளியிடப்பட்டதற்காக இந்த விருது வழங்கப்பட உள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு, சூர்யா, ஜோதிகா, இயக்குனர் டி.ஜே.ஞானவேல்ராஜா மற்றும் ஜெய் பீம் படக்குழுவினர் நேரடியாக வந்து விருதுகளை பெற்றுச்செல்லுமாறு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

இதேபோல், 'சர்வதேச வளரும் நட்சத்திரம் 2021" என்ற பிரிவில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு விருது வழங்கப்பட உள்ளது. உலகெங்கிலும் வளர்ந்து வரும் தலைவரால் செய்யப்பட்ட சிறந்த பணியை அங்கீகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த விருது வழங்கப்படுகிறது.

உலகளாவிய சமுதாய ஆஸ்கர் விருது வழங்கும் விழா அடுத்த மாதம் 19-ந் திகதியன்று இலினொய் மாகாணத்தில் உள்ள நேபர்வில்லேயில் நடைபெற உள்ளது.





# பல்சுவை கதம்பம்



## உடல் எடை அதிகரிக்க உதவும் உணவுகள்!

உ ணவு என்பது உயிர் வாழ்வதற்கு மிகவும் பிரதானமான ஒன்று. அதையும் தாண்டி, சில குறிப்பிட்ட ஊட்டச்சத்துக்கள் குறைபாடு ஏற்படுகிற பொழுது உடல் தானாக பலவீனமடைந்து விடும். அப்படி என்னென்ன சத்துக்கள் குறைவாக இருந்தால் என்ன பிரச்சினை வரும். உடல் பலவீனமாக இருக்கிறவர்கள் என்னவெல்லாம் சாப்பிட வேண்டும் என்பது குறித்து இங்கே விளக்கமாகப் பார்க்கலாம்.

### கற்றாழை

சோற்றுக் கற்றாழை மடலை எடுத்து அதன் மேல் தோலை நீக்கி, உள்ளிருக்கும் சதைப் பகுதியை நன்கு நீர் விட்டு அலசி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இளைத்த உடல் நன்கு தேறும். அப்படி சாப்பிட முடியாதவர்கள் எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து ஜுஸாகவும் சாப்பிடலாம்.

### தூதுவளை

தூதுவளையை உலர்த்திப் பொடி செய்து தேனில் கலந்து 1 ஸ்பூன் அளவு காலை வேளையில் சாப்பிட்டு வந்தால் நன்கு பசியைத் தூண்டும். இளைத்த உடல் தேறும். இதை உடல் பலவீனமான குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். அதோடு சுவாசக் குழாய் தொடர்புடைய பிரச்சினையையும் சரிசெய்யும்.

### முளைகட்டிய பயறு

பச்சை பயறை நீரில் ஊறவைத்து முளை கட்டிய பின் அதனை லேசாக அவித்து சாப்பிட்டு வந்தால் இளைத்த உடல் தேறும். உடல் மெலிந்தவர்கள் இதை தினசரி பழக்கமாக வைத்துக் கொள்ளுங்கள். அதேபோல பாசிப்பயறை அரைத்து தோசையாகவும் செய்து சாப்பிடலாம்.

### பாதாம்

பாதாம் பருப்பை ஊறவைத்து அரைத்து பாலில் கலந்து இரவு படுக்கைக்குச் செல்லும் முன் அருந்தி வந்தால் உடல் பலம் பெறும். பாதாமில் புரதச்சத்து மற்றும் கல்சியம் அதிக அளவில் இருப்பதால் உடலுக்கு வலிமை பெறும். தோள்கள் வலுவடையும். மெலிந்த தேகம் தேறும்.

### மீன்

மற்ற அசைவ உணவுகளைக் காட்டிலும் மீனில் கொலஸ்ட்ரால் மிக மிக குறைவு என்பது எல்லோருக்குமே தெரியும். அதோடு மீனில் உள்ள ஒமேகா 3 உங்களுடைய உடல் எலும்புகளுக்கு வலிமை தரக்கூடியது. அதனால் குறைந்தபட்சம் வாரத்துக்கு ஒரு முறையாவது மீன் சாப்பிடும் வழக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள். மீனில் நல்ல கொழுப்பு நிறைந்திருக்கிறது. அதனால் குழந்தைகளுக்கும் கூட கொடுக்கலாம்

### பழங்கள்

இரவு படுக்கைக்குத் தூங்கச் செல்லுகின்ற பொழுது பாலில் சிறிது சுக்கு தட்டிப் போட்டு காய்ச்சிக் குடிக்க வேண்டும். வாழைப்பழம், கொய்யாப்பழம் போன்ற மலச்சிக்கலைத் தடுக்கும் பழங்களைச் சாப்பிடலாம்.

### கொண்டைக்கடலை

இரவில் ஒரு கைப்பிடியளவு ஊற வைத்த கொண்டைக் கடலையை 10 எடுத்து இரவு ஊற வைத்த அதே நீருடன் சேர்த்துக் கடலையை மென்று சாப்பிட்டு வர வேண்டும். அதோடு வாக்கிங் மற்றும் சிறுசிறு உடற்பயிற்சி செய்து வந்தால் மெலிந்த உடல் தேறும். சோர்வு நீங்கும்.

### உடல் எடை கூட

பேரிச்சம் பழம், தேன் இவற்றோடு கற்கண்டும் சேர்த்துப் பேரிச்சம்பழ லேகியம் செய்து வைத்துக் கொண்டு தினமும் காலை மற்றும் மாலை என இரண்டு முறை 1 தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் மெலிதாக இருக்கும் உடல் பருமன் ஆகும். அதேபோன்று முருங்கை கீரை உடல் எடை குறைவதற்கு மட்டுமல்லாது, உடல் எடையைக் கூட்டுவதற்கும் முருங்கை இலை பயன்படும். முருங்கை இலையின் ஈர்க்குகளை நன்கு கழுவி எடுத்துச் சிறிது சிறிதாக நறுக்கி அதனுடன் சின்ன வெங்காயம், மிளகு, பூண்டு சேர்த்து சூப் செய்து குடித்து வந்தால் கை, கால் அசதி நீங்கும். உடல் வலிமை பெறும்.

## அதிகாலையில் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்!!

அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகளில் முதன்மையாக குடல் சுத்தமாகும். அதற்கு தண்ணீர் குடித்தவுடன், சிறிது நேரத்திலேயே மலம் கழிக்கக்கூடும். இப்படி தினமும் தவறாமல் மலம் கழித்தாலேயே, உடலில் உள்ள கழிவுகளானவை முற்றிலும் வெளியேறிவிடும். தண்ணீரானது உடலின் மூலைமுடுக்குகளில் தங்கியுள்ள நச்சுக்களை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும்.

தண்ணீரை வெறும் வயிற்றில் குடித்து வந்தால், உடலில் உள்ள கழிவுகள் மற்றும் நச்சுக்கள் வெளியேறி, விரைவில் பசி எடுக்க ஆரம்பித்துவிடும். வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால், இரத்தத்திலுள்ள சிவப்பணுக்களின் வளர்ச்சியானது அதிகரித்து, இரத்தமானது அதிகப்படியான ஆக்ஸிஜனை கொண்டிருப்பதால், உடலானது எனர்ஜியுடன் இருக்கும்.

பெரும்பாலானோருக்கு உடலில் நீர்ச்சத்து குறைவாக இருப்பவர்கள் தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் தாண்ணீர் குடித்து வந்தால், உடலின் நீர்ச்சத்தானது அதிகரித்து தலைவலி குறையும். மேலும் அல்சர் ஏற்படாமல் தடுக்கலாம்.

எடையை குறைக்க நினைப்பவர்கள், அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடித்து வந்தால், உடலில் தங்கியுள்ள நச்சுக்களுடன், உடலின் மெட்டபாலிசம் அதிகரிப்பதால் தேவையற்ற கொழுப்புக்களும் கரைந்து வெளியேறி, உடல் எடை குறைய உதவியாக இருக்கும்.

குடலானது சுத்தமாக இல்லாவிட்டால், முகத்தில் பருக்கள் வர ஆரம்பிக்கும். இப்படி பருக்கள் வந்தால் சருமமானது அழகை இழந்துவிடும். எனவே தினமும் தண்ணீரைக் குடித்து வந்தால், குடலியக்கம் சீராக நடைபெற்று, முகம் பருக்களின்றி பொலிவுடன் காணப்படும்.



## காதல் இரணங்கள்...

மீண்டும் ஏற்க மறுக்க ஒன்றை விடாப்பிடியாய் தந்து விட,
வேறு வழிகளின்றி வேதனையில் தவிக்கின்றேன் ...
மீண்டும் தெரிந்தே பழகிய நாட்களில் ஒருபோதும் நினைத்ததில்லை -
இப் பிரிவெனும் நாட்களின் நரக வேதனையை

என்றோ ஓர் நாள் பார்த்த முகமாக அறிமுகமாகி,
நண்பியின் காதலுக்காக - அவன் முகவரி அறிந்து, நண்பியாக
இணைந்தபோது, ஒருபோதும் நினைக்கவில்லை பிரிவெனும் துரோகம்
அவனால் இழைக்கப்படும் என்று......

இயல்பான புன்னகையை இரசித்தவன் பெண்மையின் கண்ணீரை
இரசிக்க மறுத்துவிட்டான், யாரோ என்றாகியும் உறவென்று
நினைத்து உரிமையாய் அன்பைப் பகிர்ந்தவள்.....
உறவாக வருபவன் மேல் உரிமையாய் இருப்பாள் என்பதை
அறியாதவனாய் போனதேனோ ......

தோழியிடம் இரசித்தவை காதலியிடம் மறுக்கப்படுவதும் ஏனோ?
எப்போதும் நீ நீயாக இரு என்றவன் பின்பு அதையே
குறையாக கூறியதும் ஏனோ...?.
விரும்பி வருவதும் பின் வெறுக்கப்படுவதும் புதன் நிகழாக ஒன்று
இல்லை என்றாலும், விரும்பிய இதயத்தின் வழியையும், உடைக்கப்பட்ட
நம்பிக்கையையும் உணராமல் இருப்பதும் முறை தானோ?

காதலை சொல்வதற்கு ஆயிரம் முறை யோசித்தும், சிலகாலம்
காத்திருந்தவர்க்கு, மீண்டும் உடைக்கப்படும் இதயத்தின் வலி உணர ஓர்
நாளிகை கூட இடமளிக்கவில்லையோ.....?
இலகுவாக சொல்லிவிட்டாய் காதலின் காலங்கள் சில மாதங்கள் என்று
அவ் சில மாதங்களில் இவள் கண்ட கனாவின் ஆண்டுகள்
எத்தனை யுகங்கள் என்பதை அறிவாயா நீ...?

வேறு யாரோ ஒருவர் என்றால் கூட மறந்தோ மன்னித்தோ விட்டிருக்கலாம்,
உயிர் நண்பனாய் இருந்தவனே உயிர் பிரியும் வலியை தந்தவன்
என்றால்....மறக்க முயற்சிக்கும் ஒவ்வொரு வினாடியும் மரண வேதனை
என்பதை எவ்வாறு கூறுவேன்? நான் அவனை சந்தித்து கல்லூரியும்,
அவனுடன் கதைத்த தொலைபேசியும், அவன் கிறுக்கி வைத்த என்
வீட்டு மேசை விரும்பும் மீண்டும் மீண்டும் அவன் நினைவுகளை மீட்டிக்
கொண்டே இவளை கொலை செய்கின்றன.

நண்பர்களின் கேலியின் போது எவ்வாறு செல்வேன்....! அவன் விட்டுச்
சென்றவை நினைவுகள் அல்ல - என்னை கொன்று கொண்டே
இருக்கின்ற இரணங்கள் என்று....!

துன்பங்கள் சூழும் போது தோழனாய் தோள் தந்தவன் பாதியில் விட்டுச்
செல்வான் என்று எண்ணியது கூட இல்லையே...
ஆறுதலாய் சில நேரம் ...... அக்கறையாய் பலநேரம் ...... ஆதரவாய்
எப்போதும் உடன் இருந்தவன் பாதியில் விட்டு விலக காரணம்
நானானேன்...

புன்னகையை பிடித்தவரிடமும், அழுகையை நம் மனதுக்கு
பிடித்தவரிடமும், மட்டுமே பகிர்ந்து கொள்பவர்கள் பெண்கள்
என்ற உண்மையை அறியவில்லையோ அவன்....?காதலை சொல்லிவிட
அந்த மூன்று வார்த்தைகளுக்காய் காத்திருந்த அவன் - இன்று பலமுறை
கூறியும் செவி கொடாமல் இருப்பதும் ஏனோ ...?

என் கோபங்களை கேலி செய்ய நிலவைக் காட்டியவன், எனக்காக
மழையை இரசித்து கவி எழுதியவன், அறியவில்லை - அன்று அவன்
தூதாக காட்டிய நிலவும், மழையும் இன்று இவள் நினைவுகளின்
இரணங்களை மீட்டிக்கொண்டே இருக்கின்றன - என்று...?

MISS.D



## வறண்ட கூந்தலுடையவர்கள் செய்ய வேண்டியவைகள் என்ன....?

வறண்ட கூந்தல் உடையவர்கள் அடிக்கடி எண்ணெய் மசாஜ் செய்து பராமரித்து வரவேண்டும். எண்ணெய்யைச் சூடாக்கித் தலை ஓட்டில் படும்படி விரல் நுனிகளால் அழுத்த தடவி 10 முதல் 20 நிமிடங்கள் வரை மசாஜ் செய்ய வேண்டும்.

இதனால் ரத்த ஓட்டம் அதிகமாகி எண்ணெய் சுரப்பிகளின் செயலும் துரிதப்படம். மேலும் உடல் உஷ்ணம் குறைக்கப்பட்டு குளிர்ச்சி தன்மை அடையும் .வறண்ட கூந்தலுடையவர்கள் முட்டை ஷாம்பு அல்லது நெல்லிக்காய் ஷாம்பு பயன்படுத்தினால் நல்ல பலனை பெறலாம் .

வறண்ட கூந்தலுக்கு மசாஜ் செய்ய கற்றாழை எண்ணெய் நல்லெண்ணெய் செம்பருத்தி எண்ணெய் பயன்படுத்தினால் முடிக்கு வறண்ட தன்மை நீங்க எண்ணெய் சத்து கிடைக்கும். மசாஜ் செய்வதற்கு முன் துவாலையினால் ஆவி ஒத்தடம் கொடுப்பது நல்லது.

தலைக்கு குளித்த பின் கடைசியில் சிறிதளவு கருப்பு வினிகர் , எலுமிச்சை சாறு இவற்றை நீரில் கலந்து அலசினால் நல்ல பலன் கிடைக்கும். பாலேடுள்ள பாலில் ஒரு முட்டையை நன்கு நுரை வரும் வரை அடித்து தலையில் தரவி 20 நிமிடம் ஊற வைத்து பின் அலசவும். வாரத்திற்கு இரண்டு முறை இவ்வாறு செய்தல் நன்கு பலன் காணலாம்.

தலையில் நல்லெண்ணெய் தேய்த்துச் ஊறவிட்டு அரை மணிநேரம் கழித்து சாதம் வடித்த கஞ்சியில் சிறிது சிகக்காய்த் தூள் போட்டு கலக்கி அதைத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வர கூந்தல் உதிர்வது நின்று நன்கு வளரும்.

# கிழக்கில் தமிழர் நிலப்பரப்பை அபகரிக்கத்துடிக்கும் முஸ்லிம் அரசியல்தலைமைகள் -வியாழேந்திரன் அதிரடி



கடந்தவார தொடர்ச்சி...

அவ்வாறு பேச வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் பேச வேண்டும் என்றால் வேறு ஆட்களுடன் பேசிக்கொள்ளுங்கள். எங்களது அரசியல் பாணியில் இவை எல்லாமே பேசித்தீர்க்க வேண்டிய விடயங்கள் அல்ல தீர்க்கப்பட்ட விடயங்கள் அவர்கள் ரீலொக்கேட் செய்யப்பட்டிருக்கின்றார்கள் அதில் எந்த மாற்றமும் இல்லை. அடுத்த விடயம் ஏறாவூர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் காபிஸ் நசீர் சொல்லுகின்றார் ஏறாவூர் களவாடப்பட்டது ஏமாற்றப்பட்டது என்று. நானும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவன். ஏறாவூர் 4ஆம் 5ஆம் உச்சியை வசிப்பிட மற்றும் பிறப்பிடமாக கொண்டவன். இன்று ஏறாவூரின் 4 5 என்பது பரம்பரையாக ஏறாவூர்ப்பற்று பிரதேசசபைக்குள் இருந்துவருகின்றது. நீங்கள் சரியாக யுத்தம் நடக்கும் காலத்திற்குள் யாருக்கும் தெரியாமல் ஒரு வர்த்தமானியை கொண்டுவந்து அந்த நேரத்தில் யாரும் பேசமுடியாது அப்படியான ஒரு சூழலிலே தெரியாமல் கெசட் பன்னும் ஆனால் இன்று ஏறாவூரின் 4 5 நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதி அதை ஏறாவூர்பற்று செயலகம் நிர்வாகம் செய்கின்றது.

இதே நேரம் ஏறாவூர் பற்றுக்குள்ளிருந்து வந்த முஸ்லிம் பகுதிகளை ஏறாவூர் நகர் சேர்த்துள்ளது. நாங்கள் அதில் தலையிடவில்லை. ஏனென்றால் மக்கள் அதனை விரும்பவில்லை ஏறாவூர்பற்றுடன் இருப்பதை. அவர்கள் ஏறாவூர் நகருடன் நிர்வாகத்தை வைத்திருக்கின்றார்கள். அவர் 1897 ஆம் ஆண்டு கெசட்டை வைத்து பேசுகின்றார். அந்தநேரம் ஐந்து இடங்கள் சொல்லப்பட்டது ஏறாவூர், காத்தான்குடி, சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந்துரை விடயங்களைப் பற்றிபேசுகின்றார். அந்த எல்லையைப்பற்றி சொல்லுகின்றார் ஒரு கட்டத்தில் காத்தான்குடி எங்கிருந்தது?, எந்த பிரதேசத்துடன் இருந்தது?, ஏறாவூர் நகர் பிரதேசத்தில் எந்த பிரதேசத்துடன் இருந்தது?, ஏன் தொடர்ந்து இருந்திருக்க முடியாது? இவையெல்லாம் நீங்கள் உங்களது நில ரீதியாக வளரீதியாக ஒரு தனித்துவமாக கிழக்கு மாகாணத்திற்குள் உங்களை மாற்றியமைக்க வேண்டும். இதை தனியான ஒரு முஸ்லிம் மாகாணமாக கொண்டு வரவேண்டும். இதையொரு கிழக்ஸ்தான் என்ற அடிப்படையில் அடையாளப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஒரு தூரநோக்கு நிகழ்ச்சி நிரலுடன் நீங்கள் செயற்படுகின்றீர்கள் இது தெரியாமல் எங்களது தமிழ் அரசியல்வாதிகள் கிழக்கு மாகாணத்துடன் சில வெங்காயங்கள் ஒரு இணக்க அரசியல் என்ற பெயரிலே உள்ளே வரலாம். அதனால் நிறைய இழந்திருக்கின்றோம், இழந்து கொண்டும் இருக்கின்றோம். அதற்கு ஒருநாளும் விட்டுக்கொடுக்க தயாரும் இல்லை. அவர் தளவாயிலிருந்து முழுக்க முழுக்க முஸ்லிம்கள் தான் இருந்தனர். இது எந்தளவு வேதனையானதும் நகைச்சுவையானதுமான விடயம். ஆகவே அவர் கருத்து சொல்லுகின்றார் 1981 ஆம் ஆண்டு தளவாயில் 2036 தமிழ் குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்கள் 3938 இருந்தன என்று. எனவே தளவாக்களை முழுக்க முழுக்க முஸ்லிம் கிராமம் என்று சொன்னால் தலவாயில் இன்று கிட்டத்தட்ட 1874 பேர் தமிழர்கள் வாழ்கின்றார்கள் அதே நேரம் 246 முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். 2020 ஆம் ஆண்டு இனரீதியாக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் தமிழ் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்கள் பற்றிய விடயம்.

ஆனால் அவரால் தலவாயிலை ஒரு முஸ்லிம் கிரமமாக அடையாளப்படுத்தமுடியவில்லை. இப்படித்தான் ஐயங்கேணியை முஸ்லிம் பகுதி என்று சொன்னீர்கள். அப்படித்தான் இன்று சில வோட்லிஸ்ட் வருகின்றது. மற்றும் கடல் எல்லையை பிடிப்பதற்காக செய்றார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. இன்று எழுவாங்கரையின் கடல் எல்லை உண்மையிலே தமிழ் மக்களின் மீன் பிடித்தொழிலை செய்கின்றவர்களின் எல்லை தான் நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டு வருகின்றது. எழுவாங்கரையில் நீங்கள் எடுத்துப்பார்த்தால் கடல் எல்லையை எடுத்துப்பார்த்தால் அதிகளிவிலான எழுவாங்கரை கடல் எல்லையிலே அனைத்து முஸ்லிம் பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து மீன்பிடித் தொழிலை செய்கின்றார்கள். நீங்கள் போய் பார்க்கவும் முடியும். வேண்டுமென்றால் பாராளுமன்றத்திலே அங்குள்ள அமைச்சர்களுக்கு அந்த கருத்தை சொல்லலாம், ஊடகத்திலே போய் சொல்லலாம்.

ஆனால் இந்த மாவட்டத்திலே இருப்பவர்களுக்குத்தான் உண்மை நிலவரம் தெரியும். இன்று கூடுதலான கடல் வளத்தை முஸ்லிம் மீன் பிடி தொழிலாளர்கள் அதை அனுபவிக்கின்றார்கள். சவுக்கடியை போய் பாருங்கள். தலவாக்களையை போய் பாருங்கள் இவையெல்லாமே உண்மைக்கு புறம்பான செய்திகள். இன்று ஒரு காலகட்டத்தில் இந்த பகுதிகளில் அரச காணிகளை எங்களது மக்கள் பாதுகாத்தார்கள். ஒரு பேர்ச் அளவிலேனும் அபகரிக்கவில்லை. ஆனால் இன்று ஐயங்கேணி தளவா சவுக்கடி வாகரை தொங்கல் இவ்வாறு பல அரச காணிகளை அரசியல் செல்வாக்கை வைத்துக்கொண்டு இன்று வரை தனிப்பட்ட நபர்கள் பலர் மாற்று சமூகத்தை சேர்ந்தவர்கள் இன்று காணிகளை பிடித்து அடாத்தாக அடைத்து 10 ஏக்கர் 20 ஏக்கர் 50 ஏக்கர் 100ஏக்கர் என பிடித்திருக்கின்றார்கள். ஆனால் இன்று இவ்வளவு காலமும் காணிகளை பாதுகாத்த மக்கள் ஒரு அரை ஏக்கர் காணி கூட அடைக்கவில்லை. இன்னுமொரு விடயம் அவர் அடிக்கடி பராளுமன்றத்தில் பேசுகின்ற பொழுது ஒட்டுமொத்த நிலப்பரப்பிலே முஸ்லிம் மக்களுக்கு 1.6, 1.3 வீதம் இருக்கின்றது என்று பாராளுமன்றத்தில் சொன்னார். தீர்வு நிகழ்ச்சியிலே 1.6 என்று சொன்னார். இடையில் பார்த்தால் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் 1.5 வீததம் தான் ஒட்டுமொத்த நிலப்பரப்பிலே இருக்கின்றது என்று சொன்னார். இப்படி தாங்களும் தங்களது பேச்சிலே புள்ளி விபரங்களை பிழையாக சொல்லிவிட்டு பின்னர் கச்சேரியில் புள்ளிவிபரத்தை பிழையாக சொல்லுகின்றார்கள் என்று அந்த விடயத்தை கூறுகின்றார்கள். தாங்களே ஒரு தெளிவில்லாமல் இருக்கின்றார்கள். அடுத்து உங்களுக்கு விளங்க வேண்டும் கூடுதலாக இன்று தென்னிலங்கையில் இருக்கின்றவர்களுக்கும் அரசாங்கத்தில் இருக்கின்றவர்களுக்கும் இவர்கள் தொடர்ச்சியாக அடையாளப்படுத்திவருகின்ற விடயத்தை பற்றி கட்டாயமாக சொல்லியே ஆக வேண்டும். நீங்கள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் ஏனென்றால். காத்தான்குடி ஓட்டமாவடி ஏறாவூர் இது மூன்றும் மட்டும் தான் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதி. இவ் மூன்றிலும் குறிப்பிட்ட நிலப்பரப்புக்களுக்குள்ளும் இந்த முஸ்லிம் மக்கள் அடக்கப்பட்டிருக்கின்றார்கள், ஒடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த முஸ்லிம் மக்கள் வேறு பகுதிகளில் இல்லை. இந்த குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் தான் காத்தான்குடிக்குள் இருக்கின்றார்கள். ஓட்டமாவடி, ஏறாவூர், போன்ற இடங்களில் மட்டும் தான் இருக்கின்றார்கள், வேறு எங்கும் மட்டக்களப்பில் இல்லை என்னும் விடயத்தை அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக சொல்லி வருகின்றார்கள். வெளியில் கதைத்து வருகின்றார்கள். இது மிக மிக பொய்யான விடயம். முழு சோற்றுக்குள் பூசணிக்காயை மறைக்கின்ற விடயம். இதை நான் உங்களுக்கு புள்ளிவிபரத்துடன் சொல்லுகின்றேன். இன்று உங்களுக்கு விளங்க வேண்டும் பிரதேசசபை உறுப்பினர்களை எடுத்தால் காத்தான்குடி நகரசபையிலே ஒரு தமிழ் உறுப்பினர் இருக்கின்றாரா? யோசித்துப்பாருங்கள். இன்று மண்முனைப்பற்று ஆரையன்பதி பிரதேசசபையில் ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதைப்போன்று கோறளைப்பற்று நோர்த் வாகரையில் ஒரு முஸ்லிம் பிரதேசசபை உறுப்பினர் இருக்கின்றார். அதைப்போன்று கோறளைப்பற்று வாழைச்சேனையில் 6 முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தார்கள். அதே போன்று ஏறாவூர்பற்று பிரதேசசபையில் ஐந்து முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மட்டக்களப்பு மாநகரசபை மண்முனை வடக்கிற்குள் ஒரு முஸ்லிம் உறுப்பினர் இருக்கின்றார். மொத்தம் காத்தான்குடி ஓட்டமாவடி ஏறாவூர் தவிர்த்து 18 கௌரவ உறுப்பினர்கள் மாநகரசபை பிரதேசசபை உறுப்பினர்கள் இந்த பகுதியிலே இருக்கின்றார்கள்.

ஆனால் காத்தான்குடி ஓட்டமாவடி ஏறாவூர் பகுதியிலே தான் முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. எனவே இந்த முஸ்லிம் உறுப்பினர்கள் எல்லாம் எப்படி வந்தார்கள்? அது புறம் இருக்கட்டும், இன்று மஞ்சந்தொடுவாய் நோர்த் மண்முனை வடக்கிற்குள் முஸ்லிம் மக்கள் 107 பேர் இருக்கின்றார்கள் மஞ்சந்தொடுவாய் சவுத்தில் 3932 முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள். நொச்சிமோட்டையில் 670 முஸ்லிம் மக்கள் இருந்தார்கள் அரசடியில் 219 முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள் புளியந்தீவு சென்றலில் 85 முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள், மண்முனை நோர்த்திற்குள் எவ்வளவோ முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள் இது சொல்லப்பட்டதா இல்லை. மண்முனை வெஸ்ட் (மேற்கு) மௌனதீவிலே காந்தி நகரிலே 65 முஸ்லிம் மக்கள் ,ருக்கின்றார்கள் மண்முனைபற்று பாலமுனையிலே 3832 பேர் இருக்கின்றார்கள். மண்முனையில் 84 பேர் இருக்கின்றார்கள் காங்கையன் ஓடையிலே 1155 பேர் இருக்கின்றார்கள். ஒல்லிக்குளத்திலே 735 பேர் இருக்கின்றார்கள் அதைப்போன்று கோவில்குளத்தில் 296 பேர் இருக்கின்றார்கள் செல்வா நகர் ஈஸ்டில் 548 பேர் இருக்கின்றார்கள். எனவே மண்முனை பற்றுக்குள்ளேயே இவ்வளவு முஸ்லிம் மக்கள் ,ருக்கின்றார்கள் தமிழ் பிரதேசசெயலக பிரிவிற்குள்ளே. இது சொல்லப்பட்டதா? இல்லை. மண்முனை நோர்த் மண்முனை வெஸ்ட் மண்முனை பற்று ஏறாவூர்ப்பற்று சவுக்கடியில 18 பேர், ஐயங்கேணியில் 145 பேர் தளவாயில் 246 பேர், ஏறாவூரில் 58பேர் கோறளைப்பற்று புதுக்குடியிருப்பில் 16 பேர் இவை எல்லாமே தமிழ் பிரதேசசெயலக பிரிவுகளிலுள்ள முஸ்லிம் மக்கள். எனவே இது ஏன் சொல்லப்படவில்லை. எந்த இடத்தில் எடுத்தாலும் எப்பொழுது எடுத்தாலும் முஸ்லிம் உறுப்பினர் எவராயிருந்தாலும் சொல்வது நாங்கள் ஏறாவூர் ஓட்டமாவடிக்குள் தான் அடைபட்டு இருக்கின்றோம் என்று. இன்று இவர்களுக்குரிய விவசாய காணிகள், போய்ப் பாருங்கள் எத்தனை பண்ணையாளர்கள் இருக்கின்றார்கள் எத்தனை விவசாயம் செய்பவர்கள் இருக்கின்றார்கள் எவ்வளவு முஸ்லிம் மக்களுக்கு காணி இருக்கின்றன. எவ்வளவு பேர் ஆடு மாடுகளை வைத்திருக்கின்றார்கள் எவ்வளவு பேர் தோட்டங்களே இல்லையென்று சொல்லட்டும் பார்ப்போம். இந்த காணிகள் எல்லாம் காட்டப்பட்டதா? அதே நேரத்தில் இன்று இவர்கள் நாங்கள் 4 சதுர கிலோ மீற்றருக்குள் இருக்கின்றோம் 8 சதுர கிலோமீற்றருக்குள் இருக்கின்றோம் என்று சொல்லுகின்றார்கள். கோறளைப்பற்று வடக்கு என்பது வாகரை பிரதேசம். என்ன கட்டப்படுகின்றது அங்கு 589 சதுர மீற்றர் கிலோமீற்றர் நிலப்பரப்புக்களை வைத்திருக்கின்றார்கள் என்று. அதில் மக்கள் வாழக்கூடிய இடம் 29.6 வீதம் இருக்கின்றது. அதில் ஒரு விவசாயகாணி இருக்கின்றது. முஸ்லிம் மக்களின் காணியும் இருக்கின்றது. 350.66 வனத்துறைக்குரியது. சதுப்பு நிலம் இருக்கின்றது 29.90 அதைப்போன்று நீர்நிலை 34.54 சதுரகிலோ மீற்றர். மலைகள் இருக்கின்றது கைவிடப்பட்ட நிலங்கள் இருக்கின்றது சதுப்பு நிலங்கள 550 கெக்டெயர் இருக்கின்றது. கோறளைப்பற்று தெற்கு 62 அயிரத்து1கெக்டயர் என்று சொல்லுகின்றார்கள். கிட்டத்தட்ட 620 சதுரக்கிலோ மீற்றர் என்று. ஆனால் கோறளைப்பற்று தெற்கில் மக்கள் வாழக்கூடிய குடியிருப்புக்களுக்கான நிலப்பரப்புக்கள் 21.24 சதுர கிலோமீற்றர்கள். மற்றையது எல்லாம் விவசாய காணிகள் வனத்துறைக்குரிய காணிகள் சதுப்பு நிலங்கள் அதைப்போன்று புள்ளி விபரங்களை ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டு வரலாம். அதைப்போன்று ஏறாவூர் பற்று 695.00 சதுரக்கிலோமீற்றர் மிகப்பெரிய நிலப்பரப்பு என்றால் ஏறாவூர் பற்று மண்முனை வடக்கிற்கு அடுத்து அதிகளவு மக்கள் வாழுகின்ற மிகப்பெரிய பிரதேச செயலகப்பிரிவு. அதில் மக்களுக்குரிய குடியிருப்புக்கான காணி 51.76 சதுர கிலோமீற்றர். மிகுதி கிட்டத்தட்ட 256 விவசாய நிலம் அதில் முஸ்லிம் மக்களும் இருக்கின்றது. 28703 வனத்துறைக்குரிய கெக்டயர் இருக்கின்றது. அதைப்போன்று சதுப்பு நிலக்கள் மலைகள் இருக்கின்றது. மலைகளில் 2550 கெக்டயர் இருக்கின்றது. அதைப்போன்று சதுப்பு நிலத்தில் 113 கெக்டயர் இருக்கின்றது. கைவிடப்பட்ட நிலங்கள் 4002 கெக்டயர்கள் ஏறாவூர்பற்றிலே இருக்கின்றது. மண்முனை மேற்கு 33.2 சதுர கிரோமீற்றர்.

கிட்டத்தட்ட 3322 கெக்டயர் தான் மக்கள் குடியிருப்புக்களுக்கான காணி. 7492 வனத்துறைக்குரிய காணி 298 கெக்டயர் சதுப்புநிலம் 336 கெக்டயர் மலைகள் கைவிடப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. 1001 கெக்டெயர் கைவிடப்பட்டது. 5 கெக்டெயர் சதுப்புநிலம். இவ்வாறு மண்முனை பற்றி ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே போகமுடியும். இன்று மட்டக்களப்பில் 500 க்கும் மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. 500 க்கும் மேற்பட்ட குளங்கள் எங்கே இருக்கின்றது? ஒவ்வொரு குளங்களினதும் பரப்பை எடுத்துப்பாருங்கள் அதிலும் மீடியம் டாங் சிமோல் டாங் இது எல்லாமே இருக்கின்றது ஏறாவூர் பற்று கோறளைப்பற்று வடக்கு கோறளைப்பற்று மேற்கு இன்று இந்த நகருக்கே மட்டக்களப்பு டவுனுக்கு ஏறாவூறுக்கு செங்கலடிக்கு தண்ணீர் கொடுக்கின்ற மிகப்பெரிய டாங் எல்லாம் மண்முனையிலே இருக்கின்றது.

12ஆம் பக்கம் பார்க்க...

11ஆம் பக்க தொடர்ச்சி...

இதை எல்லாவற்றையும் கணித்து ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு மொத்தமாக இன்று ஏறாவூர்பற்றை எடுத்துப்பாருங்கள் கிட்டத்தட்ட 695 ஸ்டாப்கள் இருக்கின்றார்கள். இதையெல்லாம் யோசிக்க வேண்டும். எனவே இன்று காத்தான்குடி ஓட்டமாவடி ஏறாவூருக்குள் வந்து மலைகள் இருக்கின்றதா பெரிய குளங்கள் இருக்கின்றதா 26 வீதமான நிலப்பரப்பு எங்களுக்கு தரவேண்டும் மிகுதியை தமிழ் மக்களுக்கு கொடுங்கள் ஆனால் அவர்கள் பிடித்து வைத்திருப்பதை எல்லாம் எங்களுக்கு தரவேண்டும் ஏமாற்றியிருக்கின்றார்கள் கொள்ளையடித்திருக்கின்றார்கள்.

நவரோக ரஞ்சினி அரசியல் செய்ய வந்து 12 வருடங்களாக இந்த முஸ்லிம்களுக்கு கொடுக்காமல் கொள்ளையடிக்கின்றார் என்று சொல்லுகின்றார்கள். அந்த அம்மணி கதைக்கின்ற சத்தமே வெளியில் வராது அவர் வந்தே தற்பொழுது இரண்டு மூன்று வருடங்கள் தான். எனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை எல்லாம் நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். ஏற்கவும் மாட்டோம். உண்மையிலே அடிக்கடி ஹாபீர் நஷீர் அவர்கள் சொன்னார் திரு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு நீங்கள் கோளை வெளியிலே அடிக்கின்றீர்கள் உள்ளே அடியுங்கள் என்று. உண்மையிலே அவர் கோளை உள்ளே தான் அடித்து வந்திருக்கின்றார். எங்களது ஆட்களும் நீண்ட காலமாக இணக்க அரசியலில் வெளியில் போய் போய் அடித்து அவர்கள் மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை கோளை தொடர்ந்து உள்ளே அடித்து தான் இன்று இந்த நிலைமைக்கு அவரது வளம் பொருளாதாரம் நிலம் தெரிகின்றது.

இன்று பாராளுமன்றத்திலே கௌரவ ஹரீஸ் அவர்களை பார்த்து கேட்கின்றேன் ஹரீஸ் அவர்களை பார்த்து கேட்கின்றேன் இன்று ஐக்கிய சரத்து கல்முனை டீஎஸ் பிரிவின் தலைமைத்துவத்திலே என்ன சொன்னார்கள் கிழக்கு மாகாணத்தின் தலைநகர் திருகோணமலையில் கல்முனை என்று சொன்னார்கள். கிழக்கு மாகாணத்தில் வடகிழக்கிணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்று யார் சொன்னது? இன்று கோறளைப்பற்று மத்தியில் இருக்கின்ற பிரதேசசபை கோறளைப்பற்று ஓட்டமாவடி பிரதேசசபை வந்திருக்கின்றது தமிழர்களுடைய மாயானக்காணியிலே. இன்று மீன் சந்தை இருக்கின்றது காளி கோவிலை இடித்து தான் மீன் சந்தையை கட்டினேன் என்று ஹஸ்புல்லாக் சொல்லுகின்றார். அந் நேரம் இந்த மாவட்ட குழுத் தலைமையைப் பயன்படுத்தி நான் காளி கோவிலை இடித்து மீன் சந்தையை கட்டினேன் என்று சொல்லுகின்றார். கௌரவ நீதிமன்றம் நீதிபதி காத்திரபூர்வமான சுதந்திரமான அவ்வாறு நாங்கள் மதிக்கின்ற நீதிபதிகளே நீதிகதிகளை மாற்றினோம் என்று சொல்லுகின்றார்கள். சிந்தித்து பாருங்கள். இது என்ன பயங்கரவாதம்?

வடகிழக்கை இணைத்தால் இரத்த ஆறு ஓடும் என்று சொல்லுகின்றார்கள் இது என்ன பயங்கரவாதம்? இன்றும் மண்முனை கோறளைப்பற்று பகுதியிலிருக்கின்ற எங்களது தனித் தமிழ் கிராமத்தை நீராவோடை என்று சொல்லுகின்றீர்கள். ஓர்களுக்கு பெயர் மாற்றப்படுகின்றது வீதிகளுக்கு பெயர் மாற்றப்படுகின்றது. இன்று பாராளுமன்றிலும் கேட்கின்றார் ரவூப் ஹக்கீமும் கேட்கின்றார் அதே நேரம் காபீர் நஷீர் அவர்களும் கேட்கின்றார் என்னவென்றால் பதிவாளர் விடயத்தை இலகுவாக கதைக்கின்றார்கள் வாழைச்சேனைக்கு ஒரு பதிவாளர் தேவைதானா என்று. வாழைச்சேனையில் பிறக்கின்ற பிள்ளைகளுக்கு ஓட்டமாவடியில் தான் பதிவது. இன்று வாழைச்சேனையில் ஒரு தமிழ் கிராமத்தில் பிறக்கின்றவன் வாழைச்சேனையில் முழுக்க முழுக்க பாரம்பரியமாக பரம்பரையாக ஒரு தமிழ் பகுதி அது. அப்படி பிறந்தவர்களுக்கு ஓட்டமாவடியில் பதிவிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இல்லை ஒரு முஸ்லிம் நபர் ஏற்றுக்கொள்வாரா காணி உறுதி பத்திரங்கள் இன்று சட்டத்திற்கு விரோதமாக மாற்றப்படுகின்றது. உரிமங்கள் மாற்றப்படுகின்றது கடந்தகாலத்தில் இவ்வாறு பலவும் நடந்தன. எங்களிடம் அரச அதிகாரங்கள் இல்லாத காலகட்டங்களில் பல இடங்களில் இந்த செயற்பாடுகள் நடந்தது. ஆட்களின் பதிவு மட்டும்தான் மாற்றப்படவில்லை. திட்டமிட்ட வகையில் கிழக்கு மாகாணத்தில் இன மாற்றங்கள் நடக்கின்றது. இல்லையென்று சொல்லட்டும் பார்ப்போம். நல்லிணக்கம் பற்றி பேசுவதாக இருந்தால் முதலாவது நல்லிணக்கத்திற்குரிய சமிஞ்சைகளை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். வடகிழக்கிணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்று எந்த தமிழ் அரசியல்வாதிகளும் சொல்லவில்லையே நீங்கள் கூறினீர்கள். அது மட்டுமா கிழக்கு மாகாணத்திற்குரிய தலைமைகாரியாலயம் CTP இலங்கை போக்குவரத்து கல்முனைக்கு கொண்டு போனீர்கள் உங்களது அரசியல் அதிகாரங்களையெல்லாம் பயன்படுத்தி. இளைஞர் உபகரணத்திற்குரிய தலைமைக்காரியாலயம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலிருந்து அம்பாறைக்கு கொண்டு சென்றீர்கள். இன்று புவியியல் தொடர்பு பற்றி பேசுகின்றீர்கள் உங்களுக்கு சாதகமான இடத்திலே. ஒரே இரவில் பிரதேசசபையாக இருந்ததை உங்களது அரசியலைப் பயன்படுத்தி மாநகரசபையாக மாற்றினீர்கள் அக்கறைப்பற்றில். 27 தமிழ் கிராமங்களை அம்பாறையில் இன்று இல்லாமல் ஆக்கினீர்கள். எத்தனை கோவில்கள் இன்று இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது திருகோணமலையை எடுத்துப்பாருங்கள், இன்று யுத்தகாலத்தில் பிரச்சனை நடந்தது என்று சொல்லுகின்றீர்கள்.

அதே மாதிரி யுத்த காலத்தில் இருந்த ஊர்காவற்படை மேற்கொண்ட அழிவுகள் வீரமுனை படுகொலையில் இருந்து திருகோணமலை மட்டக்களப்பு படுகொலை சத்துகொண்டான் படுகொலை இத்தனை படுகொலைகளும் எவ்வாறு நடந்தது. நாங்களும் பேசுவோம் நூற்றுக்கணக்கான படுகொலைகள் நடந்தது. எங்களிடம் இது சம்பந்தமான எந்த இடத்தில் என்ன வகையான படுகொலைகள் எப்படி நடந்தது. கிழக்கு பல்கலைக்கழகத்தில் அவர்கள் காட்டிக கொடுக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பேர் பேரூந்துகளில் ஏற்றப்பட்டு கடத்தப்பட்டு இன்று வரை என்ன செய்யப்பட்டார்கள் இதையெல்லாம் பேச முடியும். நாங்களும் பழைய விடயங்களை பேசவில்லை ஆனால் நீங்கள் பேசுங்கள். இன்றுகூட நீங்கள் காத்தான்குடி பள்ளிக்கு பெயின்ட் அடிக்காமல் வைத்திருக்கின்றீர்கள் ஏன் இன்னுமொரு சஹ்ரானை உருவாக்குவதற்கு. விட்டுக்கொடுப்புக்கு போய் நாங்கள் நிறைய விடயங்களை எங்களது தமிழ் மக்கள் சார்பாக இழந்திருக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலத்தை. வளத்தை. பொருளாதாரத்தை இணக்க அரசியல் என்ற பெயரிலே அது எந்த இனம் சார்ந்த அரசியல்வாதியாக இருந்தாலும் சரி நாங்கள் இணக்க அரசியல் என்ற வகையில் விட்டுக்கொடுப்பதற்கு தயாராக இல்லை. எங்களது அரசியல் பயணத்திலே தயாராக இருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு வலிமையான கட்டமைப்பின் ஊடாக எங்களின் சமூகத்தின் இருப்பை இருப்பதையாவது பாதுகாப்போம். நிறைய நாங்கள் விட்டுக்கொடுத்துவிட்டோம் இன்று நல்லிணக்கம் பற்றி பேசுகின்றவர்கள் ஏறாவூர் 4ஆம் குறிச்சி என்பது அங்கு நூற்றுக்கு நூறு வீதம்தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அதில் கோவிலுக்கு ஒரு வரவேற்பறை கட்ட வந்தபோது அனுமதி தந்திருக்கலாம் தானே. அதற்காக கோவில் தலைவருக்கு இன்று வரை பொலிஸில் என்றி வைத்திருக்கின்றார்கள். ஏன் அந்த இடத்தில் செய்ய முடியாது. 5ஆம் குறுக்கு சந்தியில் செய்யமுடியாது? ஏன் நகரசபை விடவில்லை. எனவே உங்களுடைய தூரநோக்கு என்ன?

எனவே எம்மைப்பொறுத்தவரையில் நான் இதைதிரும்பவும் தெளிவாக சொல்லி முடிக்கின்றேன். யார் வேண்டும் என்றாலும் பேசலாம் இணக்க அரசியலில் பேசுகின்ற கட்சி பேசட்டும் எம்மையும் எம் சார்ந்தவர்களையும் பொறுத்தவரையில் தமிழர்களாகிய நாம் நிறைய கிழக்கு மாகாணத்தில் விட்டுக்கொடுத்துவிட்டோம். இனி விட்டுக்கொடுப்பிற்கே இடமில்லை. ஆகவே பல இடங்கள் ரீலொக்கெட் செய்யப்பட்டு தீர்க்கப்பட்ட விடயங்கள் ஒருவருக்கு மூன்று நான்கு இடங்களில் காணிகள் இருக்கின்றது ஆகவே திரும்பவும் அந்த இடத்தில் அவர்களுக்கு காணி என்பததை ஏற்றுக்கொள்ள முடியாது. 14 செயலக பிரதேசத்திலே 10 தமிழ் மக்கள் செறிந்து வாழக்கூடிய பிரதேசங்களில் போதியளவு முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சேர்ந்து வாழ்கின்றார்கள் எந்த பிரச்சனைகளும் இல்லை. எனவே தயவுசெய்து இந்த மாகாணத்தை இந்த மாவட்டத்தை எந்த காரணத்தை கொண்டும் தனியொரு முஸ்லிம் அரசியல்வாத நிகழ்ச்சி நிரலில் தங்களுக்குரியதாக மாற்றிக்கொள்ள அனுமதிக்க மாட்டோம் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்கின்றோம்.

# வாழ்க்கை தத்துவங்கள்

பள்ளியில் கற்ற பாடத்தை விட வாழ்க்கையே அதிகமான பாடங்களை நமக்கு கற்றுத் தந்துள்ளது.

தோல்விகளை சந்திக்காத எந்த ஒரு மனிதனும் வெற்றியை அதிக தூரம் சுமக்க முடியாது.

வாழ்க்கையில் தட்டிக் கொடுத்தவர்களையும் கட்டிவிட்டவர்களையும் என்று மறவாதே.

மற்றவர்கள் பொறாமை பட வேண்டும் என்று வாழாதே பெற்றோர்கள் பெருமை படவேண்டும் என்று வாழு.

வாழ்க்கையில் ஒருவன் சொத்துசுகம் சேர்த்து வைப்பதைவிட நாலு நல்ல மனிதர்களை சம்பாதிப்பதே சிறந்தது.

வாழ்க்கை என்பது நாணயம் போன்றது, இன்பமும் துன்பமும் வாழ்க்கையின் இருபக்கம்.

உன் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் தொலைக்கலாம்! ஆனால் உன் கனவை மட்டும் தொலைத்து விடாதே அதன் வலி ஆயுள் வரை நீடிக்கும்...

இன்று என்பது நமக்கு சொந்தமான நாள்! நாளை என்பது நமக்கு சொந்தமில்லை! அதனால் இன்றே நமக்குப் பிடித்தது போல் வாழ்வோம்! போட்டி, பொறாமை, வஞ்சகம் எதுவும் இன்றி...

வாழ்க்கையின் இறுதியில் வாழ்க்கை கற்றுக் கொடுப்பது, நீ உயிருடன் இருக்கும் பொழுது சம்பாதிக்க வேண்டியது பணம் அல்ல நல்ல மனிதர்களின் மனங்களை என்று.

புரிந்தும் தவிர்க்க முடியவில்லை நிழல் உலக வாழ்க்கையை.

கனவுகள் இல்லாத வாழ்க்கை அர்த்தம் இல்லாத வாழ்க்கை

வாழ்க்கையில் இழந்த அனைத்தையும் மீட்டுவிடலாம் நம்பிக்கை இருந்தால்.

பொறாமையில் யாரையும் வீழ்க்க நினைத்தால் நீ தான் வாழ்க்கையில் நிம்மதி இழந்து தவிப்பாய்.

நீ மட்டும் இங்கே துன்ப பட வில்லை உன்னை சுற்றி உள்ள உயிர்கள் அனைத்துமே கடுமையாக போராடிக் கொண்டுதான் இருக்கின்றன தன் வாழ்க்கையை அன்றாட வாழ.

# செவ்வாழை பழத்தை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் !!

அடிக்கடி பசி உணர்வு ஏற்படும். அந்த நேரத்தில் செவ்வாழை பழத்தை சாப்பிடுவதன் மூலம் பசி உணர்வை தவிர்த்து நல்ல ஊட்டத்தை தரக்கூடிய மருந்தாக மாறுகிறது.

பிரசவ காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் உற்ற நண்பனாக இருக்கிறது . வளரும் சிசுவிற்கு நல்ல வளர்ச்சியை கொடுக்கிறது. கர்ப்பிணி பெண்களுக்கு அடிக்கடி வரக்கூடிய பசி உணர்வை சரிசெய்து அவர்களுக்கு நல்ல ஊட்டத்தை கொடுக்கிறது.

செவ்வாழை பழத்தில் அதிக அளவு கல்சியம் சத்து அதிக அளவு காணப்படுகிறது. கர்ப்ப காலத்தில் சிசுவிற்கு அதிக கல்சியம் சத்து தேவைப்படும். அப்பொழுது தாயின் உடலின் எலும்புகளில் இருந்து போதுமான சத்துக்களை உறிஞ்சுகிறது. அந்த சத்துக்களை செவ்வாழை பழம் சாப்பிடுவதால் அதிக அளவு கிடைக்கிறது.

செவ்வாழை பழம் எடுத்துக்கொள்ளும்போது அது குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. செவ்வாழை பழம் சாப்பிடுவதால் கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய மலச்சிக்கலை அது தடுக்கிறது.

கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய இரத்த சோகைக்கு செவ்வாழை பழம் ஒரு தீர்வாக அமைகிறது. செவ்வாழை பழத்தில் இரும்பு சத்து அதிக அளவு காணப்படுவதால் கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய இரத்த சோகையை சரிசெய்து ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க செய்கிறது.

கர்ப்ப காலத்தில் ஏற்படக்கூடிய இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த செவ்வாழை பழம் உதவுகிறது, செவ்வாழை பழத்தில் பொட்டாசியம் காணப்படுவதால் அவை இரத்தத்தில் சோடியம் அளவை கட்டுக்குள் வைக்கிறது.

கர்ப்ப காலத்தில் வரக்கூடிய சர்க்கரை பிரச்சினையை சரி செய்யும் அருமருந்தாக செவ்வாழை பழம் விளங்குகிறது. முக்கியமாக குழந்தை பேறு இல்லாதவர்கள் செவ்வாழை பழத்தை சாப்பிடுவதன் மூலம் கர்ப்பப்பை வலுப்பெற்று குழந்தை பாக்கியம் கிடைக்கிறது.



# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்ட போர்! - என்.சரவணன்



கடந்தவார தொடர்ச்சி...

**யார் இந்த எல்லாவல மெத்தானந்த தேரர்**

திருக்கோனேஸ்வரர் கோவில் அங்கு ஏற்கெனவே இருந்த கோகன்ன என்கிற பௌத்த விகாரையை இடித்துத் தான் கட்டப்பட்டது என்றும் கோணேஸ்வரம் என்பது கோகன்ன விகாரையே என்றும் எல்லாவல மேத்தானந்த தேரர் யூலை மாத முற்பகுதியில் "தமிழன்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டிருந்த கருத்து தமிழ்ச் சூழலில் சலசலப்புக்குள்ளானது. அதேவேளை அவர் இக்கருத்தை புதிதாக சொல்லவில்லை சிங்கள சூழலில் பல ஆண்டுகளாக சொல்லிவந்த கதை தான் அது.

சிங்களவர்களின் புனித வரலாற்று நூலான மகாவம்சத்தில் மகாசேனன் சைவக் கோவில்களை அழித்து பௌத்த விகாரைகளைக் கட்டினான் என்கிறது. அப்படி கட்டப்பட்டதில் கோகன்ன விகாரை, எறகவில்ல விகாரை, கலந்த விகாரை என்பனவற்றை குறிப்பிடுகிறது.

தொல்லியலின் பெயரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் பின்னணியில் எல்லாவல மேத்தானந்த தேரரின் நீண்ட கால பங்களிப்பு உண்டு. இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்துக்கு முக்கியமான காரணகர்த்தா அவர். கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவர் 64 ஆண்டுகளாக மேற்கொண்டு வந்த தொல்பொருள் ஆய்வுகள். பணிகள் என்பவற்றை காட்சிப்படுத்தும் கண்காட்சியொன்று எஹெலியகொட - நாபாவல சுமங்கலாராமய விகாரையில் நடத்தப்பட்டது. அவர் கண்டெடுத்த கல்வெட்டுகள். அவரின் நூல்கள். கட்டுரைகள் என்பன மட்டுமன்றி யுத்த காலத்தில் அவர் இராணுவத்துடன் சேர்ந்து ஆற்றிய பணிகள் பற்றிய புகைப்படங்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதுவரை இவர் தொல்லியல், வரலாறு சார்ந்து 50 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இதுவரை எவரும் கண்டுபிடிக்காத 500 க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களைக் கண்டெடுத்தவர் என்கின்றனர்.

"தொல்லியல் சக்கரவர்த்தி எல்லாவல" என்று அனைவராலும் அழைக்கப்படுபவர். தொல்லியல் திணைக்களம் நூற்றாண்டு விழாவைக் அரசு கொண்டாடியபோது அவருக்கு தொல்லியல் சக்கரவர்த்தி என்கிற பட்டம் சூட்டப்பட்டது. இலங்கையில் அப்பட்டம் சூட்டப்பட்ட ஒரே ஒருவர் அவர் தான். அவர் இன்றைய இனவாத சக்திகளின் முக்கிய ஆயுதம். குறிப்பாக இது சிங்கள நாடு. தமிழர்கள் அன்னியர்கள். தமிழர்களுக்கு என்று ஒரு தாயகமும் கிடையாது அங்கெல்லாம் சிங்கள பௌத்த தொன்மைகளே உள்ளன என்று தொல்பொருள் ஆதாரங்களுடன் புனையும் பணியை நீண்ட காலமாக ஆற்றி வருகிறார்.

மகாவம்சத்தை இன்றும் தொடர்ந்து இயற்றுவதற்காக அரசால் நிறுவப்பட்டுள்ள சபையில் பல வருடங்கள் உறுப்பினராக கடமையாற்றியிருக்கிறார். அரச தொல்லியல் ஆலோசனைச் சபையின் உறுப்பினரு கூட.

மெத்தானந்த தேரர் 2003 ஆம் ஆண்டு வெளியிட்ட "வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள பௌத்த பாரம்பரியம்" என்கிற நூல் சிங்கள பௌத்தர்களை இனவாத ரீதியில் தூண்டிவிட்ட முக்கியமானதொரு நூல். 479 பக்கங்களைக் கொண்ட இந்த நூலுக்கு 2003 ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் சாகித்திய விருதும் கிடைத்தது. அதன் பின்னர் பல மறு பதிப்புகளையும் கண்டது இந்த நூல். இந்த நூலில் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல பிரதேசங்களை சுட்டிக்காட்டி அங்கெல்லாம் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டதாகவும் மேலும் அவை விரிவாக தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். இந்த நூலின் விரிவாக்கித் தான் பலரும் சிங்கள பௌத்த வரலாற்றுப் புனைவுகளை பரப்பி வருகின்றனர். வடகிழக்கை உரிமை கோரி சிங்களவர்கள் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உந்திய முக்கிய நூல் இது. ஒரு முறை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்த அன்ரன் பாலசிங்கம் இந்த நூலின் ஆங்கிலப் பிரதியை வாசித்துவிட்டு அது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்ததாகவும் அதனால் விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் மெத்தானந்த தேரரின் பெயரும் இருந்ததாகவும் எல்லாவல தேரர் பற்றி கடந்த ஜனவரியில் வெளிவந்த சிங்களக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதே கட்டுரையில் இன்னொரு குறிப்பும் இருந்தது. ஒரு தடவை கிழக்கில் கொஸ்கொல்ல என்கிற பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வுகளை தன்னந்தனியாக சென்று தேடிவிட்டு மீண்டும் திரும்பமுடியாமல் வழிதவறி திரிந்தாராம். அப்போது புல்லுமலை பகுதியின் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் அவரை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வந்து குடியிருப்பொன்றில் மக்களிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார்களாம். மேற்படி நூலைப்போன்ற பாத்திரத்தை அன்று சிறில் மெத்தியுவின் நூலும் ஆற்றியிருந்தது.. 1981, 1983 இனப்படுகொலைகளின் போது முக்கிய பங்காற்றிய சிறில் மெத்தியு என்கிற இனவாதி "An appeal To Unesco to safeguard and preserve the cultural property in Sri lanka endangered by racial prejudice un lawful occupation of willful destruction" என்கிற நூலை எழுதினார். அதில் வடக்கு கிழக்கில் உள்ள பல பிரதேசங்களை படங்கள் எடுத்து வெளியிட்டு இவை சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானது என்று வாதிட்டார். 70களின் இறுதியிலும் 80களின் ஆரம்பத்திலும் பல சிங்களவர்களை இனவாத ரீதியில் தூண்டிவிட்ட நூல் இது.1980 இல் சிறில் மெத்தியு எழுதிய "சிங்களவர்களே பௌத்தத்தைக் காத்திடுங்கள்!" என்கிற நூலில் வடக்கு கிழக்கில் இலக்கு வைக்கப்பட்ட தொல்லியல் இடங்களைக் குறிக்கும் வரைபடம். இப்படம் அப்போதைய தொல்லியல் திணைகளத்தின் பணிப்பாளர் ஆ.உ.சிறிசோம தயாரித்தது. அதன் பின்னர் பீ.வீரசிங்க எழுதிய "சிங்கள சிங்கமும் மன்னாரின் தொல்லியலும்" என்கிற நூலும் அந்த வரிசையில் முக்கியத்துவம் பெற்றது. மெத்தானந்த தேரோ ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவர். அக்கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். பல ஜனநாயக அம்சங்களைக் கொண்ட 19வது திருத்தச் சட்டம் 28.04.2015 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது மொத்த 225 உறுப்பினர்களில் 212 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தார்கள். 10 பேர் சமூகமளிக்கவில்லை. அந்த 10 பேரில் ஒருவர் மெத்தானந்த தேரர். அதற்கடுத்த இரண்டு மாதங்களில் அவர் அரசியலிலிருந்து முற்றாக விலகுவதாக அறிவித்து விலகினார். அவர் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவராக இருந்தவர். 10 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எல்லாவெல மெத்தானந்த தேரர் பிக்குமார் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பதே நல்லது என்று பொது அறிவுரையும் கூறி முற்றிலுமாக "சிங்கள தேசிய இயக்க"ப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். ஆனால் பின்னர் ராஜபக்ஷ அணியோடு சேர்ந்து இயங்கத் தொடங்கினார். 1983 இனப்படுகொலை சம்பவங்களைத் தொடர்ந்து சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மீது கடும் எதிர்ப்புகள் தொடங்கியவேளை அந்த எதிர்ப்பை எதிர்த்து அதற்கு சித்தாந்த ரீதியில் நியாயம் கற்பிக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக பணியாற்றியவர்களாக மெத்தானந்த தேரோ. நளின் த சில்வா. குணதாச அமரசேகர. எஸ்.எல்.குணசேகர போன்றோரைக் குறிப்பிட முடியும். நளின் த சில்வா எழுதிய "அபே பிரவாத" மெத்தானந்த தேரோ எழுதிய "சிங்கள மீட்பன் மகாராஜா துட்டகைமுனு" ஆகிய நூல்களில் 83 க்கான சிங்கள பேரினவாத தரப்பு நியாயம் கற்பிக்கின்ற கருத்துக்கள் பலவற்றைக் காணலாம். இவை பல புனைவுகளையும் ஐதீகங்களையும் அடிப்படையாகக் கொண்ட சிக்கல் வாய்ந்த நூல் என்கிறார் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி. ஒரு முறை செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையொன்றின் போது வடக்கு கிழக்கு பகுதிகளில் கோவில் நிலங்களை ஆக்கிரமித்து அங்கே பௌத்த சிலைகளும். விகாரைகளும் கட்டப்படுவதாக உரையாற்றியபோது அதற்கு கடும் எதிர்ப்பை எல்லாவல தேரர் பாராளுமன்றத்தில் வெளியிட்டார். "கோவிலை உடைத்து பௌத்த விகாரை கட்டிய ஒரு இடத்தைக் குறிப்பிட முடியுமா? ஆனால் பௌத்த விகாரைகளை இடித்து கோவில்கள் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான இடங்களை நான் காட்ட முடியும் என்று வாதிட்டார். பாராளுமன்ற உரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பல சந்தர்ப்பங்களில் சர்வதேச மட்டத்தில் கவனத்தை ஈர்க்கும். தமிழர் தரப்பில் மேற்கொள்கின்ற முறைப்படுகளையும். தர்க்கங்களையும் எதிர்த்து - மறுத்து தவிடுபொடியாக்குவதற்கு மெத்தானந்த தேரர் போன்றார் திட்டமிட்டு பயன்படுத்தப்பட்டார்கள்.

சமீப காலமாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் மெத்தானந்த தேரரும் வரலாற்று விபரங்கள் குறித்து மாறி மாறி ஒருவரை ஒருவர் எதிர்த்தும் மறுத்தும் அறிக்கைகள் வெளியிட்டு வந்ததை அறிவீர்கள். இலங்கையில் 99.99% வீதமானவை பௌத்த தொல்லியல் இடங்களே மெத்தானந்த தேரர் இந்த செயலணியின் பின்னணி பற்றி சமீபத்தில் அரச பத்திரிகையான தினமினவுக்கு எழுதிய கட்டுரையில் இப்படி குறிப்பிடுகிறார். "வடக்கு கிழக்கில் தொல்லியல் பகுதிகள் நிறையவே உள்ளன. அவற்றில் 10% வீதம் கூட இன்னும் ஆராயப்பட்டதில்லை. குறைந்தபட்சம் அவற்றைப்பற்றிய ஆரம்ப அறிக்கைகள் கூட இல்லாதது வருந்தத்தக்க செய்தி. எனவே தான் நான் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்திலேயே பொலீசார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் அப்பகுதிகளுக்குச் சென்று விபரங்களை தொல்லியல் சான்றுகளை சேகரித்தேன். அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். அதன் மூலம் வடக்கு பகுதிகளில் உள்ள 98% வீதமான தொல்லியல் பகுதிகளை ஆராய்ந்து அவற்றை கட்டுரைகளாகவும் நூல்களாகவும் எழுதி வெளியிட்டேன். யுத்தத்தை வெற்றிகொண்ட வீரப் படையினர் நமக்கு உள்ளார்கள். யுத்த காலத்தில் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் இருந்த முக்கிய தொல்லியல் இடங்களுக்கு எந்த சேதமும் இல்லாமல் யுத்தத்தை முன்னெடுத்தவர்கள் அவர்கள். அவர்களின் ஒத்துழைப்பு தற்போதைய "ஜனாதிபதி தொல்லியல் செயலணி"க்கு அவசியம்.

வடக்கு கிழக்கு தொல்லியல் விடயங்களை அணுகும் போது பகுதி பகுதியாக அப்பிரதேசங்களை பிரிக்கவேண்டும். அவை ஒவ்வொன்றையும் பாதுகாப்பதற்கு இராணுவக் குழுக்களை நியமிக்க வேண்டும். இலங்கையில் காணப்படும் 99.99% வீதமான தொல்லியல் இடங்கள் பௌத்த தொல்லியல் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அப்பகுதிகளில் எல்லாம் பௌத்த விகாரைகளை கட்ட முடியாது. அது சிக்கல்களை ஏற்படுத்தும். ஆனால் தெரிவு செய்யப்பட்ட முக்கிய இடங்களில் அவ்வாறு பௌத்த விகாரைகளைக் கட்டலாம் அல்லது புனரமைக்கலாம். இந்தக்காரியத்துக்காகவேதேசப்பற்று.இனப்பற்றுள்ளவர்களைக் கொண்ட "ஜனாதிபதி செயலணி" உருவாக்கப்பட்டிருக்கிறது." சாராம்சத்தில் இப்படி விளங்கிக்கொள்ளலாம்: இலங்கை முழுவதும் சிங்கள பௌத்தர்களின் நிலங்களே. ஏனையோர் அந்நியர்களே என்பதை நிறுவுவதற்கும். அதன் மூலம் நில ஆக்கிரமிப்பையும். பண்பாட்டு ஆக்கிரமிப்பையும் முழு அளவில் அரச அனுசரணையில் மேற்கொள்வதை நியாயப்படுத்தி விளக்குகிறார் மெத்தானந்த தேரர். தொல்லியல் பணிகள் இராணுவமயப்படுவதையும் நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

**மாகாண சபை அதிகாரம்**

13 வது திருத்தச்சட்டத்தில் உள்ள மாகாண சபைகளுக்கான பட்டியலில் பட்டியல் பிரகாரம் தொல்லியல் சம்பந்தமான அதிகாரங்கள் மாகாண சபைக்கு உள்ளது. ஆனால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்கள் மீது மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. 13 வது திருத்தச்சட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வந்த அதிகாரங்களை இல்லாமல் செய்யும் முயற்சிகள் இப்போது மேற்கொள்வதை அறிவீர்கள். 2020 பொதுத்தேர்தல் பிரச்சாரங்களில் "13, 19 ஆகிய அரசியலமைப்பு திருத்தச்சட்டங்களை நீக்குவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தாருங்கள் என்று" பகிரங்கமாக சிங்கள பௌத்தர்களிடம் கோரி வருகிறார் பிரதமர் மகிந்த ராஜபக்ச. அதன்படி மாகாண சபைகள் முறை கலைக்கப்பட்டு. இல்லாமல் செய்யப்பட்டால் தொல்லியல் உட்பட குறைந்தபட்சம் இருக்கிற சகல அதிகாரங்களும் பறிக்கப்பட்டுவிடும் ஆபத்து இருக்கவே செய்கிறது.

தயான் ஜயதிலக்க இலங்கையின் மைய அரசியலில் முக்கியமான அரசியல் நிபுணராக கருதப்படுபவர் அவர் சமீபத்தில் அளித்த நேர்காணலொன்றில் இந்த செயலணி பற்றி முக்கிய கருத்துக்களை வெளியிட்டிருந்தார்."மூன்றில் இரண்டு பகுதியினர் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்போகும் தொல்லியல் ஆய்வுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் தமிழ் பேசும் எவரும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் இப்பணியை செய்துவிடத்தான் முடியுமா? இதுவொரு சுத்தமான இராணுவவாத நடவடிக்கை. இதுவா முன்னுதாரணம். இதன் மூலம் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. இன-மத பிரச்சினைகள் இதனால் உக்கிரமடையவே செய்யும். பொருளாதாரமும் வீழ்ச்சியுறும். கோத்தபாயவினால் இனத்துவ நிலைமைகள் மேலும் மோசமடையும்." தற்போதைய ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டதன் பின்னர் பிக்குமார்களும். அதிகாரிகளும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாரம்பரிய வணக்கஸ்தலங்களுக்கு விரைந்து அவற்றை பார்வையிடுவதும். மக்களுக்குத் தடை செய்வதும் தொடர்கிறது. தமது பண்பாட்டு முதுசங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதை எதிர்த்து மக்களும் ஒன்று கூடி கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளனர். பல இடங்களில் முறுகல் நிலை கொதிநிலையை எட்டியிருக்கிறது. இனி வரும் காலங்களில் இந்நிலை மோசமடைய வாய்ப்புகள் உண்டு. யூலை 4ஆம் திகதி கிழக்கில் வேத்துசேனை பகுதியில் பிக்குமார் இராணுவத்தினருடன் வந்து அங்கிருந்த புளியடி வைரவர் ஆலயத்தையும் அதன் சூழலையும் காட்டி தொல்லியல் பகுதியாக அறிவிக்க தலைப்பட்டார்கள். மக்கள் கூடி எதிர்ப்பு தெரிவித்து அவர்களை விரட்டியடித்த செய்தி ஊடகங்களில் வெளிவந்தன. ஆனால் அப்பிரச்சினை இன்னமும் முடிவுக்கு வரவில்லை. சிங்களத் தரப்பில் மேற்கொள்ளப்படும் கர்ஜனைகளை காண முடிகிறது. இனி அவர்கள் வேறு அராஜக வடிவத்தில் நிச்சயம் மீண்டும் வருவார்கள் என்பது உறுதி. இதுபோல 2014 ஆம் ஆண்டு புல்மோட்டை அரிசிமலையில் புனிதபூமித் திட்டத்தின் கீழ் தோட்டக் காணிகளை அபகரிக்க முற்பட்டபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த மக்களை கைது செய்து வழக்கு தொடர்ந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் பிணையில் தான் விடுதலையானார்கள். சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று தான் அனைவரும் திருகோணமலை நீதிமன்றத்தினால் விடுதலையானார்கள். தமிழ் மக்களின் பூர்விக வழிபாட்டுப் பகுதியான கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தை எப்போதோ ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டார்கள். அது பௌத்த பிரதேசம் என்று உரிமைகோரி ஒரு பௌத்த பிக்கு 2009 இல் இருந்து அங்கேயே பலாத்காரமாக தங்கியிருக்கிறார். அங்கு பௌத்த தாதுக்கொபுரம் ஒன்றை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. அங்கே ஒரு விகாரையும் கட்டப்பட்டு தொல்லியல் இடமாக பிரகடனப்படுத்தப்பட்டு வெந்நீரூற்றை பார்வையிட வருபவர்களிடம் டிக்கட் கொடுத்து பணம் வசூலிக்கப்பட்டுகிறது. அந்த டிக்கட் கூட சிங்களத்தில் தான் இருக்கிறது. இன்று பேசுபொருளாக இருக்கும் திருகோணமலை. கோணேஸ்வரம் கோவிலில். நிர்மாணிக்கப்பட்டு வந்த சகல கட்டுமானங்களையும். தொல்பொருளியல் திணைக்களம் 2015 ஆம் ஆண்டு முதல் தடுத்து வருகிறது. 1981 ஜனவரி 16 இலக்கம் 124ஜக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அப்பிரதேசம் தொல்லியல் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டு 372 ஏக்கர் நிலப்பரப்பை தொல்லியல் திணைகளத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்கள்.

தொல்லியல் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட உத்தப பணிப்பாளர் W.H.A.சுமனதாச "இந்தக் கோவில் பகுதியில் கட்டப்பட்டுள்ள 99 வீதமானவை சட்டவிரோதமானவை. நுழைவாயில் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான சிவனின் சிலையும் கூட சட்டவிரோதமானது தான்." என்கிறார். குறிப்பாக இந்தக் கோவில் வளாகத்தில் இருக்கின்ற கட்டுமாணங்களில் 99 சதவீதமானவை. சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த இடம் பௌத்த மதத்திற்கு உரியது என்றும் அறிவித்து இருக்கிறார்கள். அதே போல பிரதேசபை நிருவாகத்தில் இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் மகிந்த ராஜபக்சே ஆட்சி காலத்தின் போது மத்திய அரசின் தொல்லியல் திணைக்களத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டு இருந்தன.

தமிழர் வாழ்வியலையும் தொன்மையையும் சிதைக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த கொடூரங்கள் கோத்தபாயா ராஜபக்ச ஆட்சி காலத்தில் உக்கிரம் பெற தொடங்கி இருக்கின்றன. மரபுரிமைச் சின்னங்களை அகற்றுவதன் மூலமும். சிதைப்பதன் மூலமும் பண்பாட்டுப் பெறுமதியை மதிப்பிழக்கச் செய்யும் கைங்கரியம் கவனமாக ஒப்பேற்றப்படுகிறது. இவ்வாறு மரபுமைச் சின்னங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் ஒரு சமூகத்தின் இறந்த காலத்தை கட்டுப்படுத்த முடியும். புனைய முடியும். இருட்டடிப்பு செய்ய முடியும். எதிர்காலத்தில் அச் சமூகத்தின் அடையாளங்களே இல்லை என்றும் வாதிட முடியும். ஈற்றில் அரசியல் அதிகாரத்துக்கு தகுதியற்றவர்கள் என்கிற வாதத்துக்கும் அவர்களால் வர முடியும். இந்த அணுகுமுறை ஏற்கெனவே தொடங்கியாயிற்று. தேச நீக்க சதி என்பது திடீரென்று எழுவதல்ல. அதற்கென்று பல்முனை. பல்வடிவ. பல்பண்புளைக் கொண்ட. பல கட்ட நீட்சியுள்ளது. தொல்லியல் அதில் முக்கியமான அங்கம்.

தொடரும்...

# விளையாட்டு செய்திகள்



## இலங்கை அணி 7 தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வெற்றிக்கொண்டு சம்பியனாக மகுடம் சூடியது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையில் நடைபெற்ற 2வது சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணி 7 தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வெற்றிக்கொண்டு சம்பியனாக மகுடம் சூடியது.

இதில் முல்லைத்தீவு யுவதி கணேஸ் இந்துகாதேவி பெண்களுக்கான 25 வயதுக்குட்ப்பட்ட50-55கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றார்.

இவருடன், கண்டி -ஹலுகங்கை பகுதியைச் சேர்ந்த ஏ.எம். சாதீர் 25 வயதுக்குட்பட்ட 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்



## ICC அணியில் இந்திய வீரர்களுக்கு இடமில்லை!

2021ஆம் ஆண்டுக்கான ஐசிசி ஒருநாள் அணியின் பட்டியல் வெளியாகியுள்ளது. கடந்த ஆண்டு சிறப்பாக விளையாடிய வீரர்கள் இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளார்கள்.

பாகிஸ்தானின் பாபர் அஸாம் தலைமையிலான இந்த அணியில் எந்தவொரு இந்திய வீரருக்கும் இடம் கிடைக்கவில்லை. ஐசிசி நேற்று வெளியிட்ட 2021 ஆம் ஆண்டுக்கான டி20 அணியிலும் இந்திய வீரர்கள் யாரும் இடம்பெறவில்லை. இந்த அணியில் பாகிஸ்தான், அயர்லாந்து, தெ.ஆ., பங்களாதேஷ் அணி வீரர்களே அதிகளவில் இடம்பெற்றுள்ளார்கள். இந்தியா மட்டுமல்லாமல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.

2021 ஆம் ஆண்டுக்கான ஐசிசி ஆடவர் அணி

பால் ஸ்டிர்லிங் (அயர்லாந்து)
மலான் (தெ.ஆ.)
பாபர் அஸாம் (கேப்டன், பாகிஸ்தான்)
ஃபகார் ஸமான் (பாகிஸ்தான்)
வான் டெர் டுசன் (தெ.ஆ.)
ஷகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்)
முஷ்ஃபிகுர் ரஹிம் (விக்கெட் கீப்பர், பங்களாதேஷ்)
வனிந்து ஹசரங்கா (இலங்கை)
சிமி சிங் (அயர்லாந்து)
துஷ்மந்தா சமீரா (இலங்கை)

## ஓய்வை அறிவித்தார் சானியா மிர்சா



இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, சர்வதேச தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார். 2022 டென்னிஸ் சீசன் முடிவில் அவர் டென்னிஸில் இருந்து விடைபெறவுள்ளதாகக் கூறியுள்ளார். டென்னிஸ் விளையாட்டின் முன்னணி வீராங்கனையாக வலம் வந்த சானியா மிர்சா, தற்போது நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில், மகளிர் இரட்டையர் பிரிவில் முதல் சுற்றுடன் வெளியேறினார்.

முதல் சுற்றில் தோல்வியடைந்த பிறகு தனது ஓய்வுத் திட்டம் பற்றி அறிவித்தார்.

சானியா மிர்சா இதுவரை 6 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அவர் மகளிர் இரட்டையர் தர வரிசையின் உச்சநிலையை எட்டியுள்ளார். ஒற்றையர் தர வரிசையில் முதல் 30 இடங்களுக்குள் நுழைந்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றவர்.

## FIFA Awards 2021 – சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை!

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (ஃபிஃபா) வழங்கும் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரர் விருதை போலந்தின் ராபாட் லெவாண்டோவ்ஸ்கியும், சிறந்த வீராங்கனை விருதை ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸும் வென்றனர். இதில் லெவாண்டோவ்ஸ்கி (பேயர்ன் முனீச்) தொடர்ந்து 2 ஆவது முறையாக இந்த விருதை வெல்லும் நிலையில், அலெக்ஸியா (பார்சிலோனா) முதல் முறையாக இந்த விருதை கைப்பற்றியிருக்கிறார். ஸ்விட்சர்லாந்தின் ஜுரிச் நகரில் உள்ள ஃபிஃபா கால்பந்து தலைமையகத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முனீச்சில் இருந்து காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்ற லெவாண்டோவ்ஸ்கியிடம் அவரது கிளப் அதிகாரிகள் விருதை வழங்கினர். அலெக்ஸியாவும் காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார். சிறந்த வீரருக்கான வாக்கெடுப்பில் ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸ்ஸி (பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), எகிப்தின் முகமது சலா (லிவர்பூல்) ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி லெவாண்டோவ்ஸ்கி முதலிடம் பிடித்துள்ளார். மகளிர் பிரிவில், ஆஸ்திரேலியாவின் சாம் கெர் (செல்சி), ஸ்பெயினின் ஜெனிஃபர் ஹெர்மோசோ (பார்சிலோனா) ஆகியோரை விட அதிக வாக்குகள் பெற்று அலெக்ஸியா வெற்றியாளர் ஆகியிருக்கிறார். கடந்த ஆண்டு டிசம்பரில் வழங்கப்பட்ட பேலன் தோர் கால்பந்து விருதில் ஆடவர் பிரிவில் லெவாண்டோவ்ஸ்கி 2 ஆவது இடம் பிடித்திருந்தார். மெஸ்ஸி அதில் விருது வென்றிருந்தார். அதே விருதை மகளிர் பிரிவில் வென்றிருந்த அலெக்ஸியா, இந்த விருதையும் கைப்பற்றியிருக்கிறார். விருதுக்கான வாக்கெடுப்பில் தேசிய அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள், ஊடகங்களிடம் இருந்து லெவாண்டோவ்ஸ்கிக்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. ஆனால் ரசிகர்கள் தரப்பு வாக்குகளை லயோனல் மெஸ்ஸி அள்ளியிருக்கிறார். பேயர்ன் முனீச் அணிக்காக 2020 - 21 சீசனில் 41 கோல்கள் அடித்தும், 2021 காலண்டர்ஆண்டில் 43 கோல்கள் அடித்தும் பந்தெஸ்லிகா போட்டியில் இரு சாதனைகளை முறியடித்திருக்கிறார் லெவாண்டோவ்ஸ்கி. முன்னதாக இந்த சாதனை, அதே பேயர்ன் முனீச் அணியைச் சேர்ந்த ஜெர்மன் வீரரான ஜெர்ட் முல்லர் வசம் இருந்தது. மகளிர் பிரிவில் சிறந்த வீராங்கனையாக தேர்வாகியிருக்கும் அலெக்ஸியா, தலைமையில் தான் பார்சிலோனா மகளிர் கால்பந்து அணி சாம்பியன்ஸ் லீக் பட்டம் வென்றது. சர்வதேச அளவில் தேசிய அணிக்காக அதிக கோல்களை அடித்த போர்ச்சுகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 'ஃபிஃபா சிறப்பு விருது' வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நேரில் கலந்துகொண்டு அவர் விருதை பெற்றுக் கொண்டார். போர்ச்சுகல் அணிக்காக 2003-ஆம் ஆண்டு முதல் ஆடி வரும் ரொனால்டோ, இதுவரை 184 ஆட்டங்களில் 115 கோல்கள் அடித்திருக்கிறார். முன்னதாக ஈரான் அணிக்காக அலி டேய் 109 கோல்கள் அடித்ததே நீண்டகாலமாக சாதனையாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் அடிக்கப்பட்ட சிறந்த கோலுக்கான விருதை, ஆர்ஜென்டீன வீரர் எரிக் லமேலா வென்றுள்ளார். இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் ஆர்செனலுக்கு எதிரான ஆட்டத்தில் டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பருக்காக (தற்போது செவில்லா) அவரடித்த கோல் உலகிலேயே சிறந்ததாகத் தேர்வாகியிருக்கிறது. ஈரான் வீரர் மெஹதி தரேமி (போர்டோ) அடித்த 'பை சைக்கிள் கிக்' கோல், செக் குடியரசு வீரர் பேட்ரிக் ஷிக் (பேயர் லெவர்குசன்) அடித்த கோல் ஆகியவை லமேலாவுக்கு சவால் அளித்தன. இந்த விருதை ஆடவர் பிரிவில் எட்வர்ட் மெண்டி (செனகல்ஃசெல்சி), மகளிர் பிரிவில் கிறிஸ்டியன் எண்ட்லர் (சிலிஃஒலிம்பிக் லயன்) வென்றனர். இதில் எட்வர்டுக்கு, கியான்லுகி டோனாருமா (இத்தாலிஃபாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), மேனுவல் நியூவர் (ஜெர்மனிஃபேயர்ன் முனீச்) ஆகியோரும், கிறிஸ்டியனுக்கு ஸ்டெஃபானி லேப் (கனடாஃபாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), ஆன் காட்ரின் பெர்கர் (ஜெர்மனிஃசெல்சி) ஆகியோரும் போட்டியாளர்களாக இருந்தனர். ஆடவர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை தாமஸ் டுஷெலும் (ஜெர்மன்ஃசெல்சி), மகளிர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை எம்மா ஹெய்ஸும் பெற்றனர் (இங்கிலாந்துஃசெல்சி). வாக்கு அடிப்படையில் ஆடவர் பிரிவில் ராபர்டோ மான்சினி (இத்தாலி) 2 ஆம் இடமும், பெப் குவார்டியாலோ (ஸ்பெயின்ஃமான்செஸ்டர் சிட்டி) 3 ஆம் இடமும் பிடித்துள்ளனர். மகளிர் பிரிவில் லூயிஸ் கார்டெஸ் (ஸ்பெயின்ஃபார்சிலோனா), சரினா வெய்க்மான் (நெதர்லாந்து) ஆகியோர் முறையே 2 மற்றும் 3 ஆம் இடங்களில் இருக்கின்றனர். இந்த விருது டென்மார்க் ரசிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. யூரோ கோப்பை போட்டியில் ஃபின்லாந்துக்கு எதிரான ஆட்டத்தின்போது டென்மார்க் வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் மாரடைப்பு ஏற்பட்டு களத்தில் சரிந்த தருணத்தில், அணியினர் விக்கித்து நிற்க, மைதானத்தில் இருந்த அந்நாட்டு ரசிகர்கள் அணியினருக்கும், எரிக்சனுக்கும் ஆதரவாக எழுப்பிய குரலுக்காக இந்த கௌரவம் அளிக்கப்பட்டது. இந்த விருதும் கிறிஸ்டியன் எரிக்சன் சம்பவத்தின்போது அந்த அணியினர் காட்டிய ஆதரவு, துரிதமான செயல்பாடு, தோளோடு தோள் சேர்த்து நின்ற ஒற்றுமை ஆகியவற்றுக்காக டென்மார்க் அணி வீரர்கள் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதுக்கான போட்டியாளர்கள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தேசிய கால்பந்து அணியின் பயிற்சியாளர்கள், கேப்டன்கள், ஊடகத்தினர், ரசிகர்களின் வாக்குகள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தரப்பின் வாக்குகளும் 25 சதவீதம் என்ற அளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு வெற்றியாளர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 'இந்த விருது வென்றதை கௌரவமாக உணர்கிறேன். பந்தெஸ்லிகா போட்டியில் இத்தனை கோல்கள் அடிப்பது சாத்தியமா என முன்பு கேட்டிருந்தால், இல்லை என்று தான் கூறியிருப்பேன்' - ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி. 'இந்த விருது எங்களது அணியில் இருக்கும் அனைத்து வீராங்கனைகளுக்குமானது. இது எங்கள் அனைவருக்குமே ஊக்கம் அளிக்கும் ஒன்றாக இருக்கும்' - அலெக்ஸியா புடெலாஸ். 'அதிக கோல்கள் அடிப்பதில் சாதனையை முறியடிப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. இதற்காக கடந்த 20 ஆண்டுகளாக எனக்கு ஒத்துழைப்பு அளித்து வரும் போர்ச்சுகல் அணியின் சக வீரர்களுக்கு நன்றி' - கிறிஸ்டியானோ ரொனால்டோ.





# உலக பார்வை



## மீண்டும் ஒரு கொரோனா திரிபு!

கொரோனா தடுப்பூசி செலுத்தி கொள்ளவில்லை என்றால், மீண்டும் ஒரு கொரோனா திரிபு ஏற்படும் என ஐ.நா. பொதுச் செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. கொரோனாவில் இருந்து டெல்டா, டெல்டா பிளஸ், ஒமைக்ரான் என புதிய திரிபு வகை வைரஸ்கள் அதிக அச்சுறுத்தலாக உள்ளன.



இந்நிலையில், 2022 உலக பொருளாதார சபையில் உரையாற்றிய ஐ.நா. பொதுச்செயலாளர் குட்டெரெஸ் உலகம் முழுவதும் தடுப்பூசி செலுத்தும் பணிகளை விரைவாக செயற்படுத்துமாறு வலியுறுத்தினார். கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் பலரை இழந்து தவிக்கிறோம். இந்த நிலை இப்படியே நீடித்தால் அன்றாட வாழ்க்கையும், பொருளாதாரமும் சீர்குலையும் நிலை ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு நபரும் தடுப்பூசி போட தவறினால் புதிய திரிபு வகை வைரஸ்களை சந்திக்க நேரிடும். 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மக்கள் தொகையில் 40 வீதத்திற்கும், நடுப்பகுதியில் 70 சதவீதத்திற்கும் தடுப்பூசி போட வேண்டும் என உலக சுகாதார அமைப்பு இலக்கை நிர்ணயித்தது. இந்த இலக்கை உலக நாடுகள் நெருங்க விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை. தொழில்நுட்ப திறனுடன் வளரும் நாடுகளுடன் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் உயிரை பறிக்கும் தொற்றுநோயை கட்டுப்படுத்த முடியும் என்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் குட்டெரெஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷியாவின் புதிய தலைநகருக்கு 'நுசாந்த்ரா' என பெயர் சூட்டப்பட்டது!

இந்தோனேஷியாவின் புதிய தலைநகருக்கு நுசாந்த்ரா என பெயரிட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. ஜகார்த்தா எதிர்கொள்ளும் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்களை விடுவிப்பதற்கும், செல்வத்தை மறுபங்கீடு செய்வதற்கும் 2019இல் இந்தோனேசியாவின் தலைநகரை மாற்றுவதற்கான திட்டத்தை ஜனாதிபதி ஜோகோ விடோடோ முதலில் அறிவித்தார். தொற்றுநோய் காரணமாக இந்த நடவடிக்கை தாமதமானது.

இந்தநிலையில் தற்போது இந்த புதிய பெயர் 80க்கும் மேற்பட்ட விருப்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் இது இந்தோனேசியாவின் புவியியலைப் பிரதிபலிப்பதால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது சர்வதேச அளவில் சின்னமாக இருந்தது என்று தேசிய வளர்ச்சி திட்டமிடல் அமைச்சர் சுஹார்சோ மோனோர்ஃபா கூறினார்.

இந்த அறிவிப்பு, 10 மில்லியன் மக்கள் வசிக்கும் நகரமான ஜகார்த்தா மீதான சுமையை குறைக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது. புதிய தலைநகரை உருவாக்க இரண்டரை லட்சம் ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வரும் 2024ஆம் ஆண்டு நுசாந்த்ரா புதிய தலைநகர் மற்றுமின்றி நிறுவனங்கள், வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான இருப்பிடமாக இருக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது

தீவுக்கூட்டம் முழுவதையும் குறிக்க நுசந்தாரா பயன்படுத்தப்படுவதால், தேர்வு குழப்பமானதாக இருக்கலாம் என்று சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். கலிமந்தனில் புதிய தலைநகரம் கட்டப்படும்போது பழைய ஜாவானியச் சொல்லான நுசன்தாரா ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று மற்றவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். செவ்வாய்கிழமையன்று புதிய தலைநகர் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்த பிறகு, இந்த ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங்கலாம். 2024ஆம் ஆண்டுக்குள் புதிய தலைநகரை கட்டமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ், ஜகார்த்தா நாட்டின் வணிக மற்றும் நிதி மையமாக இருக்கும், ஆனால் அரசாங்க நிர்வாக செயற்பாடுகள் ஜகார்த்தாவிலிருந்து வடகிழக்கே சுமார் 2,000 கிமீ (1,250 மைல்) கிழக்கு காலிமந்தனுக்கு நகரும். புதிய தலைநகரம் வடக்கு பெனாஜாம் பாசர் மற்றும் குடாய் கர்தனேகரா பகுதிகளில் அமையும். சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த நடவடிக்கையானது கிழக்கு காளிமந்தனில் மாசுபாட்டை விரைவுபடுத்தும் மற்றும் ஒராங்குட்டான்கள், கரடிகள் மற்றும் நீண்ட மூக்கு குரங்குகளின் இருப்பிடமான மழைக்காடுகளின் அழிவுக்கு பங்களிக்கும் என்று எச்சரித்துள்ளனர். 2050ஆம் ஆண்டுக்குள் தற்போதைய தலைநகர் ஜாகர்தா முற்றிலும் நீருக்குள் மூழ்கி விடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அண்டார்டிகாவில் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள ஆபத்து

அண்டார்டிகாவில் காலநிலை மாற்றத்தால் பென்குவின்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



அண்டார்டிகாவில் அடெலி, ஜென்டு என இருவகை பென்குவின்கள் வசிக்கின்றன. இந்நிலையில் காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து அங்கு வெப்பநிலை அதிகரித்ததால், கடல் நீர் உறைந்து காணப்படும் பகுதிகளின் பரப்பளவு சுருங்கியது. இதனால், குளிர்ச்சியான பகுதிகளில் வசிக்கக் கூடிய அடெலி இன பென்குவின்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

அதேவேளை வெப்பமான பகுதிகளில் வசிக்க விரும்பும் ஜென்டு இன பென்குவின்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## முழுமையான போரை விரும்பவில்லை - அமெரிக்க ஜனாதிபதி

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்ள முடியும் என தாம் எண்ணுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார். எனினும் முழுமையான போரை விரும்பவில்லை என பைடன் குறிப்பிட்டுள்ளார்.



ரஷ்ய படையெடுப்பு அச்சுறுத்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அத்துடன் மேற்குலகை பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்கு ரஷ்ய தலைவர் உரிய விலை கொடுக்க வேண்டும் எனவும் பைடன் கூறியுள்ளார்.

உக்ரைன் எல்லைகளுக்கு அருகே ரஷ்யா அதன் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான படையினரை நிலைநிறுத்தியுள்ளது. இதனையடுத்து, உக்ரைனின் தற்பாதுகாப்பிற்காக குறுகிய தூர ஏவுகணைகளை வழங்குவதாக பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

## இந்திய கடற்படை கப்பலில் வெடி விபத்து: மூவர் பலி

மும்பையில் கடற்படைத் தளத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 03 கடற்படை வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் 11 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மும்பை கடற்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலிலேயே வெடி விபத்து சம்பவித்துள்ளதாக இந்திய பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது .

மும்பை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் கப்பலின் உட்பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 03 வீரர்கள் உயிரழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**INS Ranvir** என்ற இந்தக் கப்பலில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் தொடர்பிலான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து 2 நிலநடுக்கங்கள்: 27 பேர் பலி

ஆப்கானிஸ்தானின் மேற்கில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க புவியியல் மையத்தின் (USGS) விபரப்படி 4.9 மற்றும் 5.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கங்கள் வடமேற்கு மாகாணமான பாட்கிஸ் (Badghis) பகுதியில் திங்கட்கிழமை (17) ஏற்பட்டன.



மாகாண தலைநகரத்தில் இருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தில், 700-க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளிட்ட கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

தற்போது வரை குறைந்தபட்சம் 27 பேர் உயிரிழந்துள்ளனர். இடிபாடுகளில் இறந்து கிடந்தவர்களில் நான்கு குழந்தைகளும் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
பிற்பகலில் முதல் நிலநடுக்கமும், தொடர்ந்து சுமார் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு இரண்டாவது நிலநடுக்கமும் ஏற்பட்டது. காதிஸ் மற்றும் முகர் மாவட்டங்களில் இதன் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்ளது.

## இரத்தம் சொட்ட சொட்ட கணவனின் தலையுடன் வீதியில் சென்ற பெண்!



கணவனின் கழுத்தை அறுத்து மனைவி கொலை செய்த கொடூரம் ஆந்திராவின் ரேனிகுண்டாவில் நடைபெற்றிருக்கிறது. ஆந்திர மாநிலம் சித்தூரில் உள்ள ரேனிகுண்டாவின் பக்கா வீதி பகுதியைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (54). அவரது மனைவி வசுந்த்ரா (50). இந்த தம்பதிக்கு 20 வயதில் மனநலம் பாதிக்கப்பட்ட மகன் ஒருவர் இருக்கிறார்.

கணவன் மனைவி இடையே அண்மைக்காலமாக தொடர்ந்து கருத்து வேறுபாடு நடைபெற்று வந்திருக்கிறது. இந்நிலையில் இன்று மீண்டும் இவர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கொடூர கொலையில் போய் முடிந்திருக்கிறது. அதன்படி ரவிச்சந்திரனின் கழுத்தை அறுத்துள்ள வசுந்த்ரா ரத்தம் சொட்ட சொட்ட கணவரின் தலையை பையில் போட்டுக் கொண்டு பொது வெளியில் சென்றிருக்கிறார். இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருக்கிறார்கள். பின்னர் உடனடியாக விரைந்த பொலிஸார் வசுந்த்ராவை கைது செய்திருக்கிறார்கள். மேலும் இது தொடர்பாக வசுந்த்ராவிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 23.01.2022 அன்று வெளியிடப்பட்டது.